தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 58 **மலர் :** 12

உள்ளுறை

1. ஏற்றப்பாடல்கள்—ஓர் திறனாய்வு 561
சு. அழகேசன்

2. தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள் 570
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

3. கனவும் அனலும் 572
சித்தாந்தப் புலவர் இ. ஆளவந்தார்

4. தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல்-
காண்டிகை உரை 574
பேராசிரியர் ச. பாலசுந்தரம்
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

5. நாவலர் நாட்டார் ஐயாவின்
நலமிகு கற்பிக்கும் திறன் 591
சித்தாந்த கலாநிதி திரு. ந. ரா. முருகவேள் எம்.ஏ. எம்.ஓ எல்.

6. திராவிட மொழிகளின் தொல்லகராதிகள் 595
'அறிவன்' மா. சற்குணம், எம்.ஏ.,

7. பெரிய குளத்துக் கல்வெட்டில்
வரலாற்று வசர்ப்புகள் 604
புலவர் து. இராசகோபால்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2015

துணர்: 58 இரத்தாட்சி — பங்குனி மலர்: 12

மார்ச் — ஏப்ரல் 1985

ஏற்றப் பாடல்கள் — ஓர் திறனாய்வு

சு. அழகேசன்

பாமரர் இலக்கியம் எனக் கருதப்படும் நாடோடி இலக்கிய வகைகளுள் ஒருவகையினவாகிய ஏற்றப் பாடல்களின் பொதுத் தன்மைகள், அமைப்புகள், சிறப்புக் கூறுகள் போன்றவற்றைச் சுட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

கிடைக்கப் பெற்ற (1) அரிச்சந்திரன் ஏத்தப் பாட்டு (2) ஸ்ரீ இராமாயண ஏத்தப்பாட்டு (3) மேழிற் குடியாளர் சுப்ரமணியர் பேரில் பாடியிறைக்கும் ஏத்தப்பாட்டு (4) விராடபர்வ ஏத்தப் பாட்டு (5) ஞானயேத்தம் போன்ற ஐந்து ஏற்றப் பாடல்களே கட்டுரைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்றப் பாடல்கள் :

நாட்டுப்புறப் பாடல்களுள் தொழில் செய்வார் பாடல்கள் என்ற பகுப்பில் ஏற்றப் பாடல்களை அடக்குவர். தொழில் செய்வார் பாடல் வகையுள் தலைமை இடத்தைப் பெறுவன இவ்வேற்றப் பாடல்களே. "ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை" என்னும் பழமொழியே இதன் சிறப்பை விளக்கும்.

தொழில் செய்வார்கள் தாம் செய்யும் தொழிலின் அலுப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பலவகைப் பாடல்களைப் பாடிக் கொண்டே தொழில் புரிவர். ஏற்றம் பாடுவோரும் ஏற்றத் தொழிலின் கடினம் தெரியாமல் இருப்பதற்காகவும் மனத்திற்கு இன்பம் பெறவும் ஏற்றப் பாடல்களைப் பாடுகின்றனர். இப்பாடல்கள் பெரும்பாலும் மக்களுக்கு நன்கு தெரிந்த புராணக் கதைகளையே பாடுவனவாக அமைகின்றன. நன்னெறி காட்டும் இக்கதைகளில் மக்களுக்கு உள்ள ஈடுபாடும், நெடுநேரம் பாடுதற்குரிய பெரிய கதைகளாக இவை அமைந்திருப்பதும் ஏற்றப் பாடல்களில் இக் கதைகள் இடம் பெற்றதற்கான காரணமாக அறிஞர் கருதுவர் (ஆறு. அழகப்பன், 1973:69).

ஏற்ற வகை :

ஏற்றங்கள் இரு வகைகளாக அமைகின்றன. ஒருவர் மட்டும் யார் துணையுமில்லாமல் இறைக்கும் ஏற்றம் "கைத்துலா" அல்லது "ஊமைத்துலா" எனவும், இருவர் அல்லது மூவர் மிதி மரத்தில் ஏறி மேலும் கீழும் ஓடி வருவதோடு, ஒருவர் சால் பிடித்துத் தண்ணீர் இறைக்கவும் செய்யும் வகையில் அமைவன. "ஆளேறும் துலா" எனவும் அழைப்பர். ஏற்றங்களில் தண்ணீர் இறைத்தல் பொழுது புலரும் முன்பே ஆரம்பிக்கப்பட்டு, விடிந்து பத்து நாழிகை வரை தொடரப்படும் (ஆறு. அழகப்பன், 1973 : 46).

இவ்வேற்றங்களில் பயன்படுத்தப்படும் மூங்கில்கள் பற்றியும் பாடல்கள் காணப்படுகின்றன. இம்மூங்கில்கள் நல்ல உறுதியாக இருப்பதோடு, சாலின் பாரத்தைத் தாங்கும் சக்தியோடு, கிணற்றின் ஆழத்திற்குத் தக்க நீளமுடையனவாக இருக்கவேண்டும்.

எட்டடிக்குக் கோலு எடக்கி நாட்டு மூங்கில்
பத்தடிக்குக் கோலு பழவக் காட்டு மூங்கில்
அஞ்சடிக்குக் கோலு அழகி நாட்டு மூங்கில்
(கி. வா ஜகந்நாதன், 1967 : 35)

பொது அமைப்புக்கள் :

ஏற்றப் பாடல்கள் மூன்றுவித அமைப்புக்களில் அமைகின்றன.

1. காப்பு வெண்பா

ஏற்றப் பாடல்கள் காப்பு வெண்பாவால் தொடங்கப்படுகின்றன. அரிச்சந்திரன் ஏத்தப் பாட்டு, விராடபர்வ ஏத்தப்பாட்டு சுப்பிரமணியர் ஏத்தப்பாட்டு என்ற இம்மூன்றிலும் விநாயகர் மீது காப்பு வெண்பா பாடப்பட்டுள்ளது. இராமாயண ஏத்தப்பாட்டில் மட்டும் விநாயகர் மீது பாடப்பெறாது. இராமர் மீது பாடப்பட்டுள்ளது. ஞானயேத்தத்தில் காப்பு வெண்பாவே இல்லை. ஆனால் தொடக்கம் "பிள்ளையாரும் வாரீர்'' என்றே அமைகின்றது. இது போலின்றே இராமாயண ஏத்தப் பாடலும் "பிள்ளையார் வணக்கம்" காணப்படுகிது. சுப்ரமணியர் மேல் பாடப்பெற்ற ஏத்தப்பாட்டும், விராடபர்வ ஏற்றப் பாட்டும் காப்பு வெண்பாவோடு, ''பிள்ளையாரே வாரும்'', "பிள்ளையாரே வாரீர்'' என்ற தொடர்களாலும் தொடங்கப்பெற்றுள்ளன.

2. கணக்கு வகை:

இப்பாடல்களுள் ஒருவகைக் கணக்கு முறை தொடரப்படுகின்றது. இக்கணக்கு முறை அமைப்பு எல்லா ஏற்றப் பாடல்களிலும் காணப்படுகின்றது.

அரிச்சந்திரன் ஏத்தப் பாடல் "ஒருவதியாலெண்ணு'', ''இருபதியாலொண்ணு'' எனத் தொடர்ந்து "தொண்ணுருடனொண்ணு'' வரை வருகின்றது. பின்னர் "100–பிள்ளையாரே வாரி'' என முடிகின்றது. மீண்டும் "ஒருவதியொண்ணு'' எனத் தொடங்கி "200-பிள்ளையாரே வாரி'' வரை முடிகின்றது. இது போன்றே "300-பிள்ளையாரே வாரி'', ''400 பிள்ளையாரே வாரி'' வரை தொடர்ந்து அமைகின்றது. ஸ்ரீ இராமாயண ஏத்தப் பாடல் விராடபர்வ ஏத்தப்பாடல் போன்றனவும் அரிச்சந்திர ஏத்தப் பாடல் போன்றே அமைகின்றன.

சுப்ரமணியர் மேல் பாடப் பெற்ற ஏற்றப் பாடலும், ஞானயேத்தமும் வித்தியாசமாக அமைகின்றன. சுப்ரமணிய ஏத்தப்பாடல் 1

"பரியம்" என்ற தொடரை ஆகுகின்றது. "10 ஆம் பரியம்", "20 ஆம் பரியம்", "30 ஆம் பரியம்" எனத் தொடர்ந்து "100 ஆம் பரியம் வரை செல்லும். மீண்டும் "10 ஆம் பரியம்", "20 ஆம் பரியம் எனத் தொடர்ந்து செல்கின்றது. ஞானயேத்தம் "இரண்டுடனே வாரி", "மூணுடனே வாரி" எனந் தொடர்ந்து அமைகின்றது. "ஒன்பதுடனே வாரி" என்பது இல்லை. மாறாக "ஒருவதியா லெட்டாம்" எனப் பின்பு தொடங்குகிறது. இவ்வாறு "இருவதியா லெட்டாம்", "முப்பதியாலெட்டாம்" எனத் தொடர்ந்து "தொண்ணூருடனெட்டாம்" வரை வருகின்றது. இதுவே இறுதி.

இவ்வகையாக அமைவதின் நோக்கம் பற்றியும் அறிஞர்கள் கருத்துத் தெரிவிப்பர். ஏற்றம் இறைப்பவர்கள் தாங்கள் இறைக்கும் தண்ணீரின் அளவு தெரிவதற்காகவே இந்த வாய்பாடுகளை உபயோகிக்கின்றனர். இவ்வாய்பாடுகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக விளங்குகின்றன. இந்த வாய்பாடு எப்படி இருந்தாலும் பத்துச் சாலுக்கு ஒரு தடவை கூறும் கணக்கு மட்டும் அனேகமாக எங்கும் ஒரே மாதிரியாக இருக்கும். "ஒரு பதியா லெண்ணு" என்று நூறு வரை வருமெனவும் இவை "ஒருபதால் ஒன்று" "இருபதால் ஒன்று" என்பவற்றின் கொச்சை வடிவம் எனவும் அறிஞர் கருதுவர் (கி. வா. ஜகந்நாதன், 1967:33). இப்படி நூறு சால் இறைத்தால் ஒரு பரியமென்றும், ஆயிரத்துக்குப் பத்துப் பரியம் எனவும் கூறுவர். ஐந்நூறு சால்கள் இறைத்தால் ஒரு குழி அல்லது அறுபது செண்டு நிலம் தண்ணீர் பாயும் என்ற கணக்கோடு, முப்பது பதிகம் இயல்பாகப் பத்து சால் தண்ணீர் ஊற்றும் நேரம் எனவும் கருதுவதாக ஆறு. அழகப்பன் (1973:65) கூறுவார்.

3. பாடல் முடிவு

ஏற்றப் பாடல்களின் முடிவுகளும் பாடலுக்குப் பாடல் வேறுபடுகின்றன. இம்முடிகள் ஏற்றப் பாடல்களில பாடப் பெறுவதற்கான நோக்கத்தைக் கூறுவதாக்வும், கேட்போரை வாழ்த்துவதாகவும் அமைகின்றன. அரிச்சந்திரன் ஏத்தப் பாடல்,

இந்தக் கதை கேட்டோர்
பஞ்ச பூத மொன்றாய்
தஞ்சமுடன் வாழ்வார் எனவும்,

இராமாயண ஏத்தப்பாடல்,

சீதை ராமன் வாழ்க
ஜெகத்திலுள்ளோர் வாழ்க
நாடுகள் செழிக்க

நல்ல மழை பொழிக
ராமர் கதை முற்றும்
நலமுடனே வாழி

என மழை பெய்யவும், நாடு செழிக்கவும் வாழ்த்தி அமைகின்றது. ஞானயேத்தம் "பிள்ளையாரே வாரீர்" எனவும், சுப்ரமணியர் ஏத்தப் பாடல்,

பிள்ளையாரே வாரும்
பிடித்தேனையா ஏற்றம்
விக்கினரே வாரும்
விட்டுவிட்டேன் ஏற்றம்"

எனவும் அமைகின்றது. விராடபர்வ ஏத்ததிலும் முடிவு இல்லே. பொதுவாக ஏற்றப் பாடல்களில் முடிவு கேட்போரையும், நாட்டை யும் வாழ்த்தி அமைவதாகவே அமைகின்றது. "மங்களம்" போல் அமைவதால் இவ்வகைப் பாடல்கள் பொது இடங்களில் கூடப் பாடப் பெற்றிருக்கலாம் எனக் கருதவும் இடமளிக்கிறது.

நாட்டுப்புறக் கூறுகளும் இலக்கியப் பண்புகளும் :

ஏற்றப் பால்கள் நாட்டுப்புற இலக்கிய வகையைச் சார்ந்தன வாகையால் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளும், பிற இலக்கியப் பண்புகளும் சிறந்து மிளிர்கின்றன.

T 4739

1. நாட்டுப்புறப் பாடல்கள் பொதுவாக ஆசிரியர் பெயர் கொண்டு இலங்கா. ஏற்றப்பாடல்களும் ஆசிரியர் பெயா தெரியாமலேயே விளங்குகின்றன.

2. வாய்மொழி இலக்கியப் பாடல்கள் பொதுவாகக் குழுப் பாடல்களாகவே அமையும். ஏற்றப்பாடல்களும் பொதுவாகக் குழுப் பகடல்களாகவே அமைந்து காணப்படுகின்றன.

3. நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலும் இசைப் பாடல் களாகவே அமையும் ஏற்றப்பாடல்களும் இசையுடன் பாடப்பெறும் பாடல்களே.

4. நாட்டுப்புறப் பேச்சு மொழி நடையிலும் நாட்டுப்புற வழக்குகளைக் கொண்டும் நாட்டுப்புறப் பாடல்கள் அமைகின்றன. ஏற்றப்பாடல்களும் இவ்வகையில் பெரிதும் அமைகின்றன.

'பித்தந் தலைக்கேறி
பினத்துகிறாய் போடா" (அரிச்சந்திரன் ஏத்தப் பாடல்)
"என்னிட புருடன்"

"சுக்ரீவன் வுங்கள்
தோத்தமதைக் கண்டு
தூரி தமாக யென்னைன்
தூதனுப்ப வந்தேன்'' (இராமாயண ஏத்தப் பாடல்)
"தாழ சொன்ன பேச்சு
சத்தியங் காணத்தான்
யேழை சொன்ன பேச்சு
எட்டுடனே வாரி (ஞான யேத்தம்)

5. நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்களைப் பிரதிபலிக்கும். ஏற்றப் பாடல்களும் மக்களின் பழக்க வழக்கங்களைக் கூறுகின்றன. இறந்தால் வாய்க்கரிசி போடும் நிகழ்ச்சியை அரிச்சந்திரன் ஏத்தப் பாடல் காட்டுகிறது.

"மயானத்திலிருந்து
பிணஞ் சுடு பணமும்
கிழத் துணி யனுப்பி
வாய்க்கரிசி தின்று
நீ காத்திரு மென்றான்"

தனஞ் செய்ய "காப்பணம்'' தருதலையும் சுட்டுகிறது.

"அசத்தியும் வாராமல்
காப்பணமும் தந்தால்
தனம் செய்து வைப்பேன்'' (அரிச்சந்திர ஏத்தப் பாடல்)

கள் குடிக்கும் வழக்கத்தையும் ஏற்றப் பாடல் சுட்டுகிறது.

"பருத்த மரமேறி
குருத்தில் கள்விறக்கி
கூசாமற் குடித்தாற்
பேசாதே பிறகு
அஞ்சாதே நீ யத்தான்'' (ஞான யேத்தம்)

(6) நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளையும் ஏற்றப் பாடல்கள் காட்டுகின்றன.

1. கனவு நம்பிக்கை

"உடையவளுங் கூட
இரங்கினாற் பூங்காவில்
நித்திரையுஞ் செய்து
சொற்பனமும் கண்டு
தேவியுடன் சொன்னார்" (அரிச்சந்திரன் ஏத்தப்பாடல்)

2. மூட நம்பிக்கை

"இடத்தலில் கருடன்
எதிர்வரக் கண்டான்
நரையான் வலமாக
நன்மையாச்சு தென்றார் (அரிச்சந்திரன் ஏத்தப்பாடல்)

3. விதி நம்பிக்கை

"பிள்ளையில்லாப் பாவி
பெருமலடி யானேன்
விதிவச மிதுவோ
விஸ்வாமித்திரன் மாய்கை" (அரிச்சந்திரன் ஏத்தப் பாடல்)

4. மந்திர நம்பிக்கை

"மாயன் மாரீசன்
மானாகப் போவென்றான்
ராமன் கண்ணெதிரில்
மாயமானும் நிற்க (ஸ்ரீ ராமாயண ஏத்தப் பாடல்)

(7) நாட்டுப்புற பாடல்கள் நீதியை யுணர்த்துவன. ஏற்றப் பாடல்களும் பல்வகை நீதிகளை உணர்த்துகின்றன.

"என்பேரு அனுமார்
ஈனப் புத்தியாலே
மானமில்லா துரோகி
மாது நீ திருட
நீதியோ வுனக்கு
நீ பிழைப்பதில்லை" (ஸ்ரீ ராமாயண ஏத்தப் பாடல்)

(8) எதுகை மோனை நயங்கள் நாட்டுப்புறப் பாடல்களுக்கும் எதுகை மோனை நயங்கள் தோன்றக் காணப்படுகின்றன.

"நல்ல செம்பு மேனி
எல்லை ருத்திர னாம
தொல்லை முழிப் பார்வை
சொல்லுமே சிகராம்'' (ஞான யேத்தம்)
''துதி மிகுத்த சீதை
மதி யதனை யேத்த
மதுவன அசோக
வனந்தனி லிருந்தாள்" (ஸ்ரீ ராமாயண ஏத்தப் பாடல்)

(9) எளிய உவமைகளும் அணிகளும் காணப் படுகின்றன.

"அக்கினி பகவான்
அந்தணரைப் போல
வந்தடுமை கொண்டான்
ஏந்திழையான் பாலன்
மாங்குயிலைப் போல
மறையவன் பின் போனார் (அரிச்சந்திரன் ஏத்தப்பாடல்)
"மண்டலம் நடுங்க
விண்டலம் குலுங்க"

10. கற்பனை வருணனைகள் சிறந்து வரும் இடங்களும் ஏற்றப் பர்டல்களில் காணப்படுகின்றன. படைக்காட்சியை விராட பர்வ ஏற்றப்பாடல் பின்வருமாறு வருணிக்கின்றது.

எங்கெங்கும் குதிரைகள்
கண்கொளா ரதங்கள்
எண்ணிறந்த யானை
மண்ணிறந்த சேனை
பேரிகை முழக்கம்
பெருத்த திருமேளம்
நெருங்கிய கொடிகள்
பொருந்திய குடைகள்
நேர்ந்த படை கொண்டான்" (விராடபர்வ ஏத்தப்பாடல்)

11. நயமிகுந்த அடைத்தொடர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ராமாயண ஏத்தப்பாடல் சீதையைப் பல இடங்களில் அழகிய தொடர்களால் குறிக்கின்றது.

"செந்திருவாள் சீதை"
"அணிகுழலாள் சீதை
"வணிகுழலாள் சீதை"

12. நகைச்சுவை தரும் பாடல்களும் ஏற்றப் பாடல்களுக்கு ஏற்றம் கொடுக்கின்றன.

"காமாட்சித் தாயார்
ஆற்றுமணல் சேர்த்து
அரனைப் பூசை செய்தாள்
கம்பாநதி வெள்ளம்
கரைபுரண்டு ஓட
உமையவள் பயந்து
தழுவினாள் சிவனை (சுப்ரமணியர் ஏத்தப் பாடல்)

சந்திரன், மல்லன் மோதலை விராடபர்வ ஏற்றம் கீழ்வருமாறு காட்டும்.

"அவனுமிவன் மேலே
ஆர்த்துவந் தெதிர்த்தான்
தோளோடே தோள்முட்டி
துடைகளை யறைந்து
முடியில் முடிமுட்டி
மூர்க்கமாயிடித்து
முகத்தினி லறைந்து
நகைத்து விழமோதி
துவைத்துவிட்டான் போ"

(13) ஏற்றப் பாடல்கள் சாதி சமயக் காழ்ப்பின்றிச் சமயப் பொதுமை கொண்டு திகழ்வதையும் காணலாம்.

"சோதி யறிந்தோர்க்கு
தூரமில்லை யத்தான்
சாதி குலமில்லை
சற்குரு வரறிந்தால்
நிதிதிய மிதுவே" (ஞானயேத்தம்)

இவ்வாறு நாட்டுப்புறக் கூறுகள் சிறந்து, தொழிற் புரிவோர்க்கு மட்டுமன்றி, படிப்போர் அனைவருக்கும் இன்பம் தந்து எழிற் பாடல்களாகக் காட்சியளிப்பன ஏற்றப் பாடல்களாகும்.

நூலடைவு

1. மலையருவி, கி.வா. ஜகந்நாதன், தஞ்சை சரசுவதி மஹால் வெளியீடு, எண் 77, 1958.
2. நாடோடி இலக்கியம், கி. வா. ஜகந்நாதன், கலைமகள் காரியாலயம், சென்னை, 1967.
3. நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, ஆறு. அழகப்பன், கழகம், 1973.
4. அரிச்சந்திரன் ஏத்தப்பாட்டு.
5. ஸ்ரீராமாயண ஏத்தப்பாட்டு.
6. மேழிற் குடியாளர் சுப்ரமணியர் பேரில் பாடியிறைக்கும் ஏத்தப் பாட்டு,
7. விராடபர்வ ஏத்தப்பாட்டு.
8 ஞான யேத்தம்.

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

நளவெண்பா
நவநீதவெண்பா
நன்னூல்
நாமதீபநிகண்டு
நாலடியார்
நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்
நான்மணிக்கடிகை
நானா சீவவாதக் கட்டளை
நீதிவெண்பா
நெஞ்சுவிடுதூது
நெல்லைவருக்கக் கோவை
நேமிநாதம்
நைடதம்
பகவத்கீதை வசனம்
பண்டாரசாத்திரம்
பத்துப்பாட்டு
பதிற்றுப்பத்து
பரதசாஸ்திரம்
பரதம்
பல்பொருட்சூளாமணி
பலகோவை
பலகோவைக்கொத்து
பழமொழி
பன்னிருபாட்டியல்
விசுவநாத சுவாமி திருப்பணி உலா
விநாயகரகவல்
விரிபொருள் நிகண்டு
விளைவெண்பா
வீரசோழியம்
வெண்பாப்பாட்டியல்
கைகூண்ட அம்மானை
ஜீவனம் போதனை

குறிப்புகள்

1. திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்கள் (தமிழாய்வு–தொகுதி 9, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு : 1979) இவை பற்றி விளக்கமாக எழுதியுள்ளார்கள்.

2. மு. சண்முகம் பிள்ளை, *தமிழாய்வு* தொகுதி 9, பக். 39.

3. அ. விநாயகமூர்த்தி, *மூலபாட ஆய்வியல்*, பக். 73.

4. *திருக்குறள் மூலபாடம்* (1812) பக். 2

5. சரவை - எழுத்துப் பிழை (*தமிழ்ப் பேரகராதி* தொகுதி ; 3 பக். 1315)

துணை நூல்கள்

1. *தமிழாய்வு*, தொகுதி 9, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1979)

2. *தமிழாய்வு*, தொகுதி 10, சென்னைப்பல்கலைக் கழக வெளியீடு, 1979.

3. *மூலபாட ஆய்வியல்*, அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை, 1978.

தடைசெய்யப்பட்ட மருந்துகள்-கவனிக்க

இந்தியாவில் சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தப் படும் சில மருந்துகள் ஆபத்தானவை எனக் கருதப் பட்டுப் பிற நாடுகளில் ஏற்கனவே தடை செய்யப்பட்டு விட்டன. நாமோ, இந்த அபாயத்தை உணராமல் இன்றும் பயன்படுத்தி வருகிறோம். கேடு தரும் அந்த மருந்துகளில் சில ;

நோவால்ஜின் (Novalgin), பாரால்ஜின் (Baralgin) ஆகியவை வலி, காய்ச்சல் இவற்றைக் குணப்படுத்த நம்மால் பயன்படுத்தப் படுகின்றன அல்லவா? இவற்றைப் பயன் படுத்தினால் ரத்த ஓட்டத்தில் கோளாறு ஏற்படும் எனக் கண்டு பிடிக்கப்பட்டுப் பல மேலை நாடுகள் இந்த மருந்துகளுக்கு விடை கொடுத்து விட்டன. இதேபோல, வயிற்றுப் போக்கைத் தடுக்க மெக்ஸாபோர்ம் (Mexaform) எந்தெரிவியோபோர்ம் (Enterioviofor்m) என்கிற பெயர்களில் விற்பனையாகும் பல மாத்திரைகள், குருட்டுத் தன்மை, பக்கவாதம் ஆகியவற்றை உண்டுபண்ணுவது அறியப்பட்டதால், மேற்கு நாடுகளில் அவையும் தடைசெய்யப்பட்டுள்ளன. நாமும் விழிப்பாக இருத்தல் அவசியம்.

"நன்றி : *அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்-1,*

கனலும் அனலும்

சித்தாந்தப் புலவர் இ. ஆளவந்தார்

'கனலெரி அனல் புல்கு கையவனே' என்று ஆவடு துறையரனைச் சம்பந்தப் பெருமான் பாடினார். கனன்று எரிவது கனல். அடங்கிய தீ அனல். அனல் காய விரும்புவோர் எரியும் தீயிடை எய்தார்,

கரியடுப்பு அனலைக் காக்கும். தீ எரிந்தால் தான் அடுப்பில் சூடேறும். ஆறிக் கிடக்கும் அனலை விசிறி எழுப்பிச் சூடேற்ற வேண்டும். தேநீர்க் கடைகளில் தீம்பால் பொங்கி வழியாமேலும் சூடு ஆறாமலுமிருக்கக் கரியடுப்பையே கையாளுவர். ஆனால் காற்றமுத்தமுள்ள (Pressure Stove) ஸ்டவ் தன்மீதுள்ள பண்டங் களை மிக விரைவில் சூடேற்றும்.

பொது மருத்துவ மனைகளில் வழங்கப் பெறும் வண்ண நீர்க் கலவைகளும், மாத்திரைகளும் தாமதமாகவே பலனளிக்கும். தீங்கு விளைவியாது. உடனடியாகப் பரிகாரம் காண விழைவோர் ஊசி மருந்தையே நாடுவர்.

தேவர்களின் பகைவர் அசுரர். அசுரர்களின் அரசன் சூரபன்மன். சூரன், வெந்தழல் வேள்வியில் தன்னையே முற்றாகுதியாக் கொடுத்துச் சிவபெருமானிடம் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகம் ஆளும் வரத்தைப் பெற்றான். யாகத்திற்கும் தியாகத்திற்கும் பொருத்தமாக 'Sacrifice' என்ற ஆங்கிலச்சொல் அமைந்துளது.

'வேண்டுவார் வேண்டுவதே ஈயும்' விமலன் விளைவினைக் கருதாது வரத்தைத் தந்தான். அன்றியும் எது வினையினும் எதிரேற்று வெல்லும் ஆற்றல் தன்பால் இருப்பதால் அவ்வரத்தை வழங்கினன் போலும். ஆனால் ஒரு நிபந்தனை 'என்னைப் போன்ற சத்தியாலன்றி இல்லை உனக்கு இறுதி' என்றார். வரம் தந்த வாய்மையால் மதர்த்த சூரன் நிபந்தனையைச் செவியேற்கவில்லை. போர் மூண்டபோது சிங்கமுகன் நிபந்தனையை நினைவுறுத்தும் போது சிங்கமுகனே அதனை வேண்டுமென்று இட்டுக்கட்டியதாகக் குற்றஞ் சாட்டுகிறான்.

அரனது வரன் வலியாலும், சிங்கமுகன், தாருகன் என்ற தம்பிமாரது படைபலத்தாலும் பத்துத்திசையிலும் சென்று வென்று

வாகை சூடித் தன்னிகரில்லாது விளங்கினான். இவ்வெற்றி களெல்லாம் ஒரு வீரன் அடையத்தக்கனவே. ஆனால் அமரரைச் சிறைபிடித்து அவர்களை மீன் பிடிக்க ஏவியதும், இந்திராணியைக் கவர்ந்து வரமுயன்றதும் அடாத செயல்கள்.

அல்லற்பட்டு அழுது ஆற்றாத தேவர்கள் அரனிடம் முறை யிட்டனர். அப்போது தான் முக்கட் பரமன் தமது தீக்கண்ணி லிருந்து சுடர் வடிவான சுப்பிரமணியனைத் தோற்றுவித்தார்.

சூரன் ஆணவ மலத்தின் உருவகம். அதனைத் தலையெடுக்க ஒட்டாது அடக்கி வைத்திருத்தலே அறிஞர்தம் கடன். இதனை உணர்த்தவே முதல்வன் முயலகனைக் கொல்லாது தன் ஊன்றிய திருவடிக்கீழ் உய்யவிட்டுள்ளான். அன்றியும், ஆணவம் அடியோடு மடிந்து போனால் உயிர்கள் சிவாநந்தத்தைச் சுவைக்க இயலாது போகும்.

முருகப் பெருமானும் முதல்வனை ஒப்ப ஆணவத்தின் உருவாய சூரனை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்டானேயன்றிக் கொன்றிலன் ஆயினும் 'முருகன் மயில்வாகனத்தில் இருப்பது போல் இருக்கிறேன் என்று மக்கள் சொல்வது போல் முருகப் பெருமானும் எப்போதும் விழிப்பாகவே (alert) இருக்கிறான்.

எனவே ஆறிய அனல் அரன். சீறி எழுந்த கனல் சிவசுப்பிரமணியன். படி ஞாயிறு பரமன். எழு ஞாயிறு எழிலசர் மயிலோன்.

'உலகமுவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு'

என்ற நக்கீரர் வாக்கும் ;

'சீர்திகழ் தோகை மயில்மேலே ஒரு
செஞ்சுடர் தோன்று திறம் போலே'

என்ற வள்ளலார் வாக்கும் இதற்குத் துணை செய்யும்.

பேராசிரியர் சு. பாலசுந்தரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

எ. டு:- கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க்குவளையொடு இடையிடுபுவிரைஇ
ஐது தொடைமாண்ட கோதைபோல
நறியள் நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்குமினிதே (குறு-62)

எனவரும். இதன்கண் பொறிநுதல் வியர்த்தல் முதலியவை நிகழாமல் கூட்டம் நிகழ்ந்தவாறு கண்டு கொள்க.

பிறவும் சான்றோர் செய்யுட்கண் இவ்வாறு வருவனவற்றை ஓர்ந்து கொள்க.

சூ. 21 அவையும் உளவே அவையலங்கடையே

கருத்து :- மேற்கூறிய புகுமுகம் புரிதல் முதலிய இருபத்து நான்கும் அவைபோல்வன பிறவும் எண்வகை மெய்ப் பாட்டிற்கும் உரிய பொருள்களாம் எனகின்றது.

அஃதாவது 'உடைமை இன்புறல்' முதலிய முப்பத்திரண்டும் 'எள்ளல் இளமை' முலாயவை இல்லாதவிடத்து மெய்ப்பாட்டுப் பொருளாக வரும் என்பதனை அச்சூத்திரத்து இறுதிக்கண் "அவையுமுளவே அவையலங்கடையே'' என மாட்டேற்றிக் கூறினார். பின்னர்ப் புகுமுகம் புரிதல் முதலியவற்றை வகுத்துக் கூறி அவை 'மன்னிய வினைய நிமித்தமாம்'' என்றும் "வினை உயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே''என்றும் கூறியதல்லது அவற்றிற்குரிய மெய்ப்பாட்டுத்தொடர்பினைப் புலப்படுத்தவில்லை. ஆதலின், அகத்திணைபற்றி அங்ஙனம் பண்பும் செயலுமாக வரும் அவையெல்லாம் எண்வகை மெய்பாடுகட்கும் பொருளாக அமையும் என இச்சூத்திரத்தால் மாட்டேற்றிக் கூறினார் என அறிக.

பொருள் : எள்ளல்முதல் விளையாட்டீறாகக் கூறப் பெற்றவை தலைவருபொருளாக அமையாதவிடத்து அகத் திணைக்கு உரியவாகவரும் புகுமுகம் புரிதல்முதலாய இருபத்துநான்கும் அன்னபிறவாய பொருளும் மெய் பாட்டுப் பொருளாக அமைதற்கு உளவாகும்,

இச் சூத்திரத்தின் நிரலையும், பயனையும், சுட்டுச் சொற்களின் மரபையும் ஓர்ந்து செம்பொருள் காணாமல் உரையாசிரியன்மார் 'அவையுமுளவே' என்பதற்குப் பின்வரும் இன்பத்தை வெறுத்தல் முதலாயினவும் உளவெனப் பொருள் கூறிச் சென்றனர். அங்ஙனம் கூறின் அது வெற்றெனத் தொடுத்தலாய் முடியும் என்க. மற்றும் புகுமுகம் புரிதல் முதலாயவற்றையும் பின்வரும் இன்பத்தை வெறுத்தல் முதலாயவற்றையும் மெய்ப்பாடு தோன்றுதற்குரிய அடிப்படைப் பொருள்கள் எண்ணாமல் அவை ஒவ்வொன்றும் மெய்ப்பாடு என்றே கருதி விளக்கங் கூறிச் சென்றனர்.

இவை யாவும் மெய்ப்பாடுகளாயின் "அவையும் அன்ன" அவற்றோரன்ன-அவற்றொடுவ் கொளலே, அவையும் மெய்ப் பாடாகும் என்ப" என்றாற்போலகூட்டிக் கூறலாவதல்லது இங்ஙனம் "அவையலங்கடை'' என விலக்குதல் ஒவ்வாதென்க.

இங்ஙனம் செந்தமிழ் நெறியினைத்தேறாது ஆரிய நூல் மரபினைப் போற்றி வலிந்து செய்யப்பட்டுள்ள உரைவிளக்கங்கள் தொல்காப்பியச் செய்திக்குப் பொன் விலங்காகித் தமது பொலிவான் மயக்கி நிற்பதை விளக்கப்புகின் மிகவிரியுமாகலின் மாணாக்கர் மரபு நெறி ஓர்ந்து நடுவுநின்று ஆய்ந்து கொள்வாராக.

சூ. 22:- இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதமாய்தல்
பசியட நிற்றல் பசலைபாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்பு நனி சுருங்கல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல் மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல் அவன்றமருவத்தல்
அறனழிந்துரைத்தல் ஆங்கு நெஞ்சழிதல்
எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழியுவத்தல்உறுபெயர் கேட்டல்
நலந்தக நாடின் கலக்கமு மதுவே (22)

கருத்து:- இயற்கைப் புணர்ச்சிமுதல் தோழியிற் புணர்வு ஈறாக நால்வகையாக வகுத்தகளவொழுத்தின்கண் சிறந்து வரும் இருபத்து நான்கு பொருள்களைக் கூறி களவின்பகுதியாய்க் களவிற்கும் வரைவிற்கும் இடைப் பட்ட வரைவு மலிதல், வரைவு கடாதல் பகுதிக்கும் ஒருவழித்தணத்தல் வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதல் ஆகிய பிரிவுப் பகுதிக்கும் உரியவாக நிகழும் கிளவிகள் பற்றிவரும் உணர்வும் செயலுமாகிய

பொருள்களைத் தொகுத்து அவையும்மன்னிய வினையின் நிமித்தமாய்ப் மெய்ப்பாட்டுப் பொருளாக அமையும் என்கின்றது.

பொருள்:- நலமுற ஆராயின் இன்பத்தை வெறுத்தல் முதல் கலக்கம் ஈறாகக் கூறப்பட்ட இருபதும் மேற்கூறிய மன்னிய வினையின் நிமித்தமாம். எனவே இவையும் அவையலங்கடை, மெய்ப்பாட்டிற்குரிய பொருளாதற்குள என்பதாம்

'நலத்தக நாடின்' என்றது இலக்கணநெறி பொருந்த ஆராயின் என்றவாறு அஃதாவது பசியடநிற்றல் ஐயஞ்செய்தல் போல்வன புறப்பொருள் பற்றிய ஒழுகலாற்றிற்கும் ஏற்ப நிற்பினும் ஆண்டுப் பசியடுதல், வறுமை காரணமாக நிற்கும் ; ஈண்டுக் காதலுணர்வால் உண்ணுதற்கொவ்வா உளநிலை காரணமாக நிற்கும். என ஓர்ந்து உணர்தல் வேண்டுமென்பதாம். அங்ஙனம் நாடுதல் மேல்வருவன வற்றிற்கும் ஒக்குமாதலின் "நலத்தக நாடின்" என்பதை இடைநிலை விளக்காகக் கொள்க.

கலக்கமும் நலத்தக நாடின் என மாறிக் கட்டிக் கொள்க. கலக்கமும் என்னும் உம்மையை ஏனைச் செவ்வெண்களோடும் கட்டிக் கொள்க.

கலக்கம் நடுவணைந்திணைக்கண் பெருந்திணைப் பகுதியாக வந்து நிகழும் என்பதனை அறிவிக்கப் பிரித்துக் கட்டப்பட்டதென்க.

இவற்றையெல்லாம் புணர்ச்சி நிமித்தமாக வலிந்துரை கூறி விளக்குவார் பேராசிரியர். அவர் கருத்துச் சொற்பொருளமைதிக்கும் நூல் நெறிக்கும் பொருந்தாமை உணரப்படும்.

1. இன்பத்தை வெறுத்தலாவது: தலைவன் பரிவு காரணமாக இன்பத்திற்குரிய பொருள்களை வெறுத்தல், இன்பம் – ஆகுபெயர். அவை தென்றல், மாலைப்பொழுது நிலவு, யாழ், குழல், சாந்து, பூ முதலியனவையாம்.

எ.டு :- வன்புறை இன்சொல் நன்பலபயிற்றும்
நின்வலித் தமைகுவன் மன்னோ அல்கல்
புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்கோற்
கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய் சிறுகுழல் வருத்தாக்காலே (அக-74)

எனவரும். இஃது அவலத்திற்குப் பொருளாக அமையும்.

2. துன்பத்துப் புலம்பலாவது: பிரிவாற்றாமையான் படருற்று மெலிந்து வருந்துதல்.

எ.டு :- காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளென் (குறள் : 1162)

எனவரும். இதுவும் அழுகைக்குப் பொருளாக வரும்.

3. எதிர்பெய்து பரிதலாவது :காதலர் தம் காதல் மிகுதியான் தோன்றும் உருவெளிப்பாடுகண்டு இரங்குதல்.

எ.டு :- வாராதாயினும் வருவது போலச்
செவிமுதலிசைக்கும் அரவமொடு
துயின்மறந்தனவாற் றோழியெங் கண்ணே

என்பது தலைவன் உருவெளிப்பாடுகண்டு தலைவி இரங்கியது.

வானர்பாடி வரங்களைந் தானாது
அழிதுளி தலைஇய புறவிற் காண்வர
வானரமகளோ நீயே
மாண்முலை யடைய முயங்கியோயே (ஐங்-478)

என்பது தலைவி உருவெளிப்பாடு கண்டு தலைவன் இரங்கியது. இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

4. ஏதமாய்தலாவது : கூட்டத்திற்கு இடையூறானவற்றை எண்ணி இனைதல்.

அவை குறித்த பருவத்து வாராது மறந்துறைவர் கொல், ஆற்றிடைத் தலைவற்கு ஊறு நேருங்கொல், ஏதிலர் வரைவு தமர் நேர்வர்கொல் என்பன முதலியனவாம்.

எ.டு :- அன்னோ, மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருந்தம தோனாது
....
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும்
அத்தம் நீளிடை அழப்பிரிந்தோரே (குறு-307)

என்பது தலைவன் பிரிந்த வழி, மறப்பன் கொல்லோ எனவும்
ஆற்றினது ஊறு எண்ணியும் தலைவி வருந்தியது
இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

5. பசியட நிற்றலாவது : பசிவருத்தவும் அதனைக் களைய முற்படாமல் உணவை வெறுத்திருத்தல்.

எ.டு :- இனியான், உண்ணலும் உண்ணேன்
வாழலும் வாழேன்...... (கலி-23) எனவரும்
அன்னாய் வாழிவேண்டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந்தனள் என வினவுதி ...... (அகம்-48)

என்பது மது. இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

6. பசலை பாய்தலாவது : பிரிவாற்றாமையான் மாமைக் கவின் மாறி மேனி பசப்பூர நிற்றல். (பாய்தல்-பரவுதல)

எ.டு :- யாங்குவல்லுநையோ ஓங்கல் வெற்ப
இரும்பல் கூந்தல் திருந்திழையரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவே தெய்யோ (ஐங்-231)

எனவரும். இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

7. உண்டியிற் குறைதலாவது : தாயர் பரிந்து உணவு ஊட்டிய வழி நனி உண்ணாது ஒழியவும் குறைத்துண்ணுதல்

எ.டு :- தீம்பாலூட்டினும் வேம்பினும் கைக்கும்
வாராய் எனினும் ஆர்வமொடு நோக்கும்
நின்னிற் சிறந்த தொன்றிலளே
என்னினும் படா அள் என்னிதற்படலே (பேராசிரியர் உரைமேற்கோள்)

இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

8. உடம்புநனி சுருங்கலாவது : பசியட நிற்றலானும் உண்டியிற் குறைதலானும மேனி மெலிவுறுதல்

எ.டு :- யாமெங் காதலர்க் காணேமாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரைபோல
மெல்ல மெல்ல இல்லாகுதுமே (குறு—290)

எனவரும். இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

9. கண்துயில் மறுத்தலாவது : உடம்பு சோர்வுற்றவாலையும் உள்ளம் உறங்க ஒருப்படாமையின் கண் துஞ்சாதிருத்தல்.

எ.டு ;- நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்து
இனிதடங்கினரே மாக்கள் முனிவின்றி

நனந்தலை யுலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே (குறு—6)

எனவரும். இஃது அவலத்திற்குப் பொருளாக அமையும்.

10. கனவொடு மயங்கலாவது : தன்னுணர்வின்றி ஒருகால் துயிலெய்திய வழி நேர்ந்த கனவிடத்துக் காதலனைக் கண்டு களித்து, விழித்த வழி காணாமையின் கலங்குதல்

எ.டு :- கோதை கோலாக, இறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை அலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி ஆங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும்
கனவினாற் கண்டேன் தோழி காண்தக (கலி—128)

எனவரும். இது மருட்கைக்கும் அவலத்திற்கும் பொருளாக அமையும்.

11. பொய்யாக் கோடலாவது : தலைவன் தன்னணி செய்யவும் பிரிவச்சத்தான் அதனைப் பொய்யாகக் கற்பித்துக் கொண்டு இனைதல்.

எ.டு :- கனவினான் எய்திய செல்வத்தனையதே
ஐய எமக்குநின் மார்பு (கலி-68)

எனவும்

வானின் இலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை (கலி-41)

எனவும் வரும்.

இஃது இனிவரலுக்குப் பொருளாக அமையும்.

12. மெய்யே என்றலாவது : தலைவன் மாட்டுப் பொய்ம்மை நிகழினும் தன் காதன்மிகுதியான் அதனை மெய்ம்மையாகக் கருதிக் கொள்ளுதல்.

எ.டு :- கானங்காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே (குறு-21)

எனவரும்.

இது பெருமிதத்திற்கும் பொருளாக அமையும்.

13. ஐயஞ் செய்தலாவது : தலைவர் சொல்லையும் செயலையும் ஐயுற்றுக் கருதுதல்

எ.டு :- ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொல் அறியேன்என்னும் (கலி-4)

எனவரும்.

தூதவர் விடுதரார் துறப்பார்கொல் நோதக
இருங்குயி லாலுமரோ (கலி-33)

என்பதுமது.

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

14. அவன்தமர் உவத்தலாவது : தலைவனைச் சார்ந்தாரைக் கண்டுழியும் அவர் சொற்கேட்டுழியும் உளம் மகிழ்தல்.

எ.டு :- வந்துழிக்கண்டு கொள்க.

அவன் தமரேயன்றி அவன்நாட்டுப் பொருள் முதலியவற்றை உவத்தலையும் இதன்கண் அடக்கிக்கொள்க.

எ.டு :- ....அவர் நாட்டு
மாலைப்பெய்த மணங்கமழுந்தியொடு
காலை வந்த காந்தள் முழுமுதல்
மெல்லிழை குழைய முயங்கலும்
இல்லுய்த்து நடுதலுங்கடியா தோட்கே (குறு-361)

எனவரும்.

இஃது உவகைக்குப் பொருளாக அமையும்,

15. அறனழித்துரைத்தலாவது : பிரிவுத்துன்பத்தான் உளம் நொந்தலைவி தலைவன் முதலானோரிடத்து அறமில்லை என வெறுத்துப் பேசுதல்

எ.டு :- ஓஒ கடலே தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமை எடுத்துப்
பற்றுவேன் என்றியான் விழிக்குங்கால் மற்றுமென்
நெஞ்சத்துள் ஓடி ஒளித்தாங்கே துஞ்சா நோய்
செய்யும் அறனில்லவன் ... (கலி—144)

என்பது தலைவன் அறனில்லான் என்றது.

ஊர் அலரெழச் சேரி கல்லெனா
ஆனாதலைக்கும் அறனில் லன்னை
தானே இருக்க தன்மனை (குறு—262)

என்பது அன்னை அறனில்லாள் என்றது

தன்னுயிர் போலத் தழீஇ உலகத்து
மன்னுயிர் காக்குமிம் மன்னனும் என்கொலோ

இன்னுயிர் அன்னானைக் காட்டி எனைத்தொன்றும்
என்னுயிர்காவாதது (கலி—143)

என்பது அரசன் அறனில்லான் என்றது.

இஃது வெகுளிக்குப் பொருளாக அமையும்.

அறனளித்துரைத்தல் எனப்பாடங்கொண்டு அதற்கேற்ப விளக்கந் தருவார் பேராசிரியர். அது பொருந்தாமையை ஆங்கு நெஞ்சழித்தல், எனப்பின்வருவதனான் அறியலாம்.

16. ஆங்கு நெஞ்சழிதலாவது : அறனழித்துரைத்தாங்குத் தன் நெஞ்சழிவு தோன்றப் பேசுதல் ஆங்கு என்பது உவமைச்சொல்.

எ.டு :— பொங்கிரு முந்நீ ரகமெல்லாம் நோக்கினை
திங்களுட்டோன்றியிருந்த குறுமுயால்
எங்கேள் இதனகத் துள் வழிக் காட்டீமோ
காட்டீயாயின் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன், ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் — மதி திரிந்த
என்னல்லல்-தீராயெனின் (கலி—144) எனவரும்.

பிறர்தாம் அறனழிய நின்றார். தான் அறவழி நிற்பதாகத் தலைவி கருதுவதனான் தன்னெஞ்சழிய நின்று கூறினாள் என்க. இதனைப்

பேணான், துறந்தானை நாடும் இடம்விடாயாயின்
பிறங்கிரு முந்நீர் வெறுமணலாகப்
புறங்காலிற் போக இறைப்பேன் முயலின்
அறம்புணை யாகலும் உண்டு (கலி. 114)

என்பதனான் அறிக.

இஃது அவலத்திற்குப் பொருளாக அமையும்

7. எம்மெய்யாயினும் ஒப்புமை கோடலாவது: பிரிவாற்றாது புலந்த தலைவி நெஞ்சழிந்த நிலையில்தான் காணும் பொருள் எல்லாம் தன்னைப் போலத் துன்புறுவதாகக் கருதிக்கோடல். மெய் என்றது பொருளை உருவப்பொருளும் அருவப் பொருளும் அடங்க "எம்மெய்யாயினும்" என்றார்.

எ.டு :- மன்றிரும் பெண்ணை மடல்சேர் அன்றில் !
நன்றறை கொன்றனர் அவரெனக் கலங்கிய
என்றுயர் அறிந்தனை நரல்தியோ எம்போல
இன்று ணைப்பிரிந்தாரை உடையையோ நீ (கலி-129)

எனவரும்.

இது தலைவி ஒப்புமை கொண்டு கூறியது.

இனி மெய் என்பதற்கு உடலுறுப்பெனக் கொண்டு தலைவன் பிற பொருளைத் தலைவியொடு ஒப்புமை கொண்டு கூறலையும் இதன்கண் அடக்கிக்கொள்க.

எ டு :- நுதலும் முகனும் தோளுங் கண்ணும்
இயலும் சொலும் நோக்குபு நினைஇ
ஐதேய்ந்தன்று பிறையுமன்று
மைதீர்ந்தன்று மதியுமன்று
வேயமன்றன்று மலையுமன்று
பூவமன்றன்று சுனையுமன்று
மெல்லஇயலுல் மயிலுமன்று
சொல்லத் தளரும் கிளியுமலறு
என ஆங்கு
அனையன பல பாராட்டி ...... (கலி-55)

எனவரும்.

இதன்கண் தலைவன் தலைவி உறுப்பொடு ஒப்புமை கொண்டு கூறியமைகண்டு கொள்க.

மதியும் மடத்தை முகனும் அறியசப்
பதியிற் கலங்கியமீன் (குறள் 116)

என்பதுமது.

இது தலைவி கூற்றின்கண் இளிவரலுக்கும் தலைவன் கூற்றின்கண் உவகைக்கும் பொருளாக அமையும்.

18. ஒப்புவழி உவத்தலாவது : தம் நிலைமைக்கேற்ப ஒப்பநிற்கும் பொருள்கண்டவழி உவப்புறதுல்

எ டு :- எழுதருமதியங் கடற்கண்டாஅங்கு
ஒழுகுவெள்ளருவி ஓங்கு மலைநாடன்
ஞாயிற னையன் தோழி
நெருஞ்சியனைய வென் பெரும்பணைத்தோளே
(குறு-315)

இதன்கண் ஞாயிறு தலைவனுக்கும் நெருஞ்சிதலைவிக்கும் ஒப்பநின்று தலைவிக்கு உவப்பளித்தவாறு கண்டு கொள்க.

கார்புறந்தந்த நீருடை வியன்புலத்துப்
பல்லா புகுதரும் புல்லென்மாலை
முல்லை வாழியோமுல் லைநீநின்

சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர்மாட்டே (குறு–162)

இதன்கண் முல்லை தலைவியின் முறுவலொடு ஒப்ப நின்று தலைவற்கு உவகை செய்தவாறு கண்டு கொள்க.

இதற்கு உரையாசிரியன்மார்

பால்கொளல் இன்றிப் பகல்போன் முறைக்கொல்லாக்
கோல் செம்மை ஒத்தி ... (கலி—86) என்னும் கலிச்

செய்யுளை எடுத்துக் காட்டுவர். அஃது ஊடல் நெஞ்சினாய தலைவி கூற்றாய்க் கற்பிற்குரித்தாவதலலது ஈண்டைக்கு ஏலாமை அறிந்து கொள்க. இன்பத்தை வெறுத்தல் முதலிய இப்பொருள்கள் களவிற்கே உரியவை என்பது மேல்விளக்கப்பட்டது.

19. உறுபெயர் கேட்டலாவது : தலைவனது பெருமை பற்றிய புகழினைத் தலைவி விரும்பிக் கேட்டல்.

எ.டு :- பொய்த்தற்குரியனோ பொய்த்தற்குரியனோ
அஞ்சலோம் பென்றாரைப் பொய்த்தற்குரியனோ
குன்றகல் நாடன் வாய்மையிற் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றியற்று (கலி-41)

எனத் தோழி தலைவன் பெருமைகூறிப் பின்னர்,

கூடி அவர் திறம் பாட என் தோழிக்கு
வாடியமென்றோள்ளும் வீங்கின
ஆடமை வெற்பன் அளித்தக்கால் போன்றே (கலி. 43)

எனத் தலைவியின் உவப்பினை விளக்கியவாறு கண்டு கொள்க. இவை இரண்டும் உவகைக்குப் பொருளாக அமையும்.

20. கலக்கமாவது : ஆற்றாமையான் மதிதிரிந்து சொல்லுதற் காகாதன சொல்லுதலும் செய்தற்கொவ்வாதன செய்தலுமாம்.

எ.டு :- மெலியப் பொறுத்தேன் களைந்தீமின் சான்றீர்
நலிதரும காமமும் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங்கென்னை
நலியும் விழுமமிரண்டு (கலி–142) எனவும்
கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுள் கண்டாங்கே
ஆடையான் மூடய் அகப்படுப்பேன் சூடிய
காணான் திரிதரும் கொல்லோமணி மிடற்று
மாண்மலர்க் கொன்றையவன் (கலி-142)

எனவும் வரும். இஃது அழுகைக்கும் இளிவரலுக்கும் பொருளாக அமையும். இவ்இருபது பொருளும பெருமபான்மையும் தலைவிக் குரியவாக நிகழும் சிறுபான்மை தலைவற்கும் ஏற்கும். ஏற்பவை மேலே கூறப்பட்டன.

சூ. 23. முட்டுவயிற் கழறல் முனிவு மெய்ந்நிறுத்தல்
அச்சத்தின் அகறல அவனபுணர்வு மறுத்தல்
தூது முனிவன்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரையிம்மையென்று
ஆயிரு நான்கே அழிவில் கூட்டம் (23)

கருத்து : கற்பொழுக்கத்திற்கு அடிப்படையாய் அதற்குமுன் னிகழும்வரைவிற்குரிய கிளவிகள் பற்றி வரும உணர்வும் செயலுமாகியவற்றைத் தொகுத்து அவை மேற்கூறிய மன்னிய வினையின் நிமித்தமாய் எண்வகை மெய்ப் பாடுகட்குப் பொருளாக வரும் என்கிறது.

பொருள் : முட்டுவயிற்கழறல் முதலாகக் கட்டுரையின்மையீறாகச் சொல்லப்பட்ட பொருள் எட்டும் அழிவில் கூட்டத்திற்கு நிமித்தமாம்.

எனவே இவையும் அவையலங்கடை மெய்ப்பாட்டுப் பொருளாதற்கு உள என்றவாறு,

இவற்றின் சொற்பொருளை நோக்கின் இவை எட்டும் வரைந்து எய்தும் அழிவில் கூட்டத்திற்கு (கற்பிற் புணர்ச்சி) ஏதுவாவனவன்றி அழிவில் கூட்டமாதற்கு ஏலாமையான் இவையும் மேலன போல நிமித்தம் என்பது நன்கு புலனாகும். ஆதலின் மன்னிய வினைய நிமித்தம் என்பதனை அதிகாரத்தாற் கொண்டு பொருள் உணர்ந்து கொள்க. என்று, என்பது எண்ணிடைச்சொல். ஏகாரம் இசைநிறை.

'பினவரும் தெய்வமஞ்சல்' முதலிய பத்தும் "செப்பிய பொருள்ன" என்பதனான் அவை அழிவில் கூட்டத்திற்குரியவை என் இச்சூத்திரத்திறுதியொடு மாட்டெறிந்து கூறுவார் ஆசிரியர். அம்மாட்டேறு இனிது பொருள் படற் பொருட்டு இச்சூத்திரத்து அழிவில் கூட்ட நிமித்தம் என்னாமல் வாளா அழிவில் கூட்டம் எனக் கூறினார். கூறி நிமித்தம், என்பதனை அதிகாரத்தாற் கொள்ள வைத்தார் என அறிக.

1. முட்டுவயிற்கழறலாவது : தலைவி இச்செறிப்புறுதலானும் தலைவன் வருந்தொழிற்கு அருமைப்பாடுறுதலானும் கூட்டத்திற்கு முட்டுப்பாடெய்திய வழித் தலைவி கழற்றுரை கூறுதல்;

நொச்சி வேலித்தித்தன் உறந்தைக்
கன்முதிர் புறங்காட்டன்ன
பன்முட்டின்றால் தோழி நங்களவே (அகம்-122)

எனத்தலைவன் முட்டுப்பாடுற்ற வழி,

...................நாரை
அறுகழிச் சிறுமீன் முனையின் செறுவிற்
கண்ணாறு நெய்தல் கதிரொடு நயக்கும்
தண்ணந்துறைவற் காணின்-முன்னின்று
கடிய கழறல் ஒப்புமதி, தொடியோள்
இன்னளாகத்துறத்தல்
நும்மிற்றகுமோ என்றனை துணித்தே (குறு-296)

எனத் தோழியைக் குறிப்பாற் கழறுமாறு கூறுதலைக்கண்டு கொள்க.

இஃது வரைவுகடாதற்குறிப்பாதலையும் அதனான் இது வரைந்தெய்தும் கூட்டத்திற்கு நிமித்தமாதலையும் அறிக

இது வெகுளிக்குப் பொருளாக அமையும்.

2. முனிவுமெய்ந் நிறுத்தலாவது: தலைவன் வரைவிற்குரியன புரியாமல் களவு நீட்டித்தலின் அவ்வெறுப்புத் தன்மேனியிற் புலப் படத் தோழியை வற்புறுத்துங்குறிப்பொடு நிற்றல்

எ.டு :- நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே
இமைதீய்ப்பன்ன கண்ணீர்தாங்கி
அமைதற் கமைந்த நங்காதலர்
அமைவில ராகுதல் நோமென்னெஞ்சே (குறு-4)

எனவரும்

இன்னுயிர் கழிவதாயினும் நின்மகள்
ஆய்மலருண்கண் பசலை
காமநோயெனச் செப்பாதீமே (அகம்-52)

என்பதும் அது.

இதுவும் வெகுளிக்குப் பொருளாக அமையும்.

3. அச்சத்தின் அகறலாவது : தலைவற்கு வருந்தொழிலான் ஊறு நேருங் கொல் எனத்தலைவி அஞ்சிக் குறியிடத்து நேராது சேயளாய் ஒழுகுதல்.

எ.டு :- இன்னமாகவும் நல் னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது கைம்மிக்கு
இறும்புபட்டிருளிய இட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச்சூடிக்
கான நாடன் வரூஉம், யானைக்
கயிற்றுப்புறத்தன்ன கன் மிசைச் சிறுநெறி
மாரிவானந்தலைஇ நீர்வார்பு
இட்டருங்கண்ண படுகுழி இயவின்
இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே (அக-128)

எனவரும். இதன்கண் 'நெஞ்சு சென்றது' என்றதனால் தலைவி தான் குறியிடத்திற்குச் செல்லாது வலித்திருத்தல் புலப்படும். இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்.

4. அவன் புணர்வு மறுத்தலாவது : தலைவன் பகற்குறியும் இரவுக் குறியும் வேண்டிய வழி அவற்றை மறுத்தொழுகுதல்

எ,டு :- பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந்தாஅங்கு
இன்னா திசைக்கும் அம்பலொடு
வாரல் வாழிய ஐய வென் தெருவே (குறு-139)

எனவும்

நல்வரை நாடநீவரின்
மெல்லியலோரும் தான்வாழலளே (அகம்-12)

எனவும் வரும்

இஃது அச்சத்திற்குப் பொருளாக அமையும்.

5. தூது முனிவின்மை : வரைவு மலிதல் வேண்டி அவன் புணர்வு மறுத்து வலித்திருக்கும் தலைவி பிரிவாற்றாமையான் புள்ளும் மேகமும் முதலாய பொருள்களை நோக்கித் தன்னிலையைத் தலைவற்குக்கூறுமாறு தூதுரைத்தலை வெறாது விரும்புதல்

எ டு :- கானலுங் கழறாது கழியும் கூறாது
மேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒரு நின்னல்லது பிறிதியாதுமிலனே
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கமழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்
தண்டாதூதிய வண்டினம் களிசிறந்து
பறவை கிளருந்துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ (அகம்-170)

எனவரும்

இஃது உவகைக்குப் பொருளாக வரும்.

தலைவன் தூது விடுதலை முனியாமை எனவும் பொதுவிற் பொருள் கொள்ள நின்றதேனும் களவின்கண் தோழியை இரந்து பின்னிற்றலன்றித் தலைவன் தூது விடுதல் மரபன்மையான் இது தலைவிக்கே உரியபொருளாகும் என்க.

6. துஞ்சிச் சேர்தலாவது : வரைதலால் எய்தும் கூட்டம் தான் விரும்பியாங்கு நிகழாமல் நீட்டித்தலான் தலைவி உளம் மடிந்து மனை சேர்ந்திருத்தல்

துஞ்சுதல் -- மடிந்திருத்தல் இதனைத்
துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவதஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் (புற-182)

எனவருதலானறிக.

எ.டு :- புனவன் துடவைப் பொன்போற் சிறுதினை
கிளி குறைத்துண்ட கூழை இருவி
பெரும்பெயல் உண்மையில் இலையொலித்தாங்கென்
உரஞ்செத்தும் உளெனே தோழியென்
தலம்புதி துண்ட புலம்பினானே (குறு-133)

எனவரும்.

இதன்கண் 'உரெஞ்செத்தும் உளென்' என்றதனான் தலைவி மடிமையுற்றுப் புலம்பியிருத்தல் புலனாகும்.

இஃது இளிவரலுக்கும் அழுகைக்கும் பொருளாக அமையும்.

7. காதல் கைம்மிகலாவது : மறைபிறரறியாதெழுகும் நிறைதளர்ந்து புள்ளொடும் பிறவொடும் தலைவி நொந்து கூறலும், நெஞ்சுளைதலுமாம், இடைக் காலத்தார் இதனைக் "காமமிக்கழிபடர்" என்பர்.

எ.டு :- யாரணங்குற்றனை கடலே, பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலும் கேட்குநின்குரலே (குறு-163)

எனவும்

உள்ளினும் உள்ளம் வேமே உள்ளாது
இருப்பினெம் அளவைத்தன்றே வருந்தின்

வான்றோய் வற்றே காமம்
சான்றோரல்லர் யாம் மரீஇயோரே (குறு. 102)

எனவும் வரும்

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

8. கட்டுரையின்மையாவது : துஞ்சிச் சேர்ந்து கையறவுற்ற நிலையில் பிறரைக் கழறிஉரைக்கும் மன எழுச்சியின்றி வாய் வாளாதிருத்தல் கட்டுரைத்தல்-கழறியுரைத்தல்

எ.டு :- .... துறைவன்
குறியானாயினும் குறிம்பினும் பிறிதொன்று
அறியார்க் குரைப்பலோ யானே எய்தவிப்
பனையெழில் மென்றோள் அணைஇய அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த
களவனும் கடவனும் புனைவனுமவனே (குறு-312)

எனவரும்.

இது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

இதற்கு உரைமறுத்திருத்தல் எனப் பொருள் கூறுவர் உரையாசிரியன்மார். அது கருத்தாயின் ஆசிரியர் உரையாமை, உரையாடாமை, உரைமறுத்திருத்தல் என்றாற் போலக் கூறுவரன்றிக் கட்டுரை என இங்ஙனம் அடைகொடுத்துக் கூறார் என்க. மேலும் உரையாடாமை என்பது மெய்ப்பாட்டுப் பொருளாதற்குச் சிறவாமையும் ஓர்ந்து கொள்க.

சூ. 24 :- தெய்வமஞ்சல் புறையறந்தெளிதல்
இல்லது காய்தல் உள்ளதுவர்த்தல்
புணர்ந்துழியுண்மைப் பொழுதுமறுபாக்கம்
அருள்மிக உடைமை அன்புதொக நிற்றல்
பிரிவாற்றாமை மறைந்தவையுரைத்தல்
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே (24)

கருத்து :- புகுமுகம் புரிதல் முதலாகக் கட்டுரையின்மையீறாகக் களவிற்கும் வரைவிற்கும் நிமித்தமாகியபொருள்களைத் தொகுத்துணர்த்தி, இச்சூத்திரத்தான் வரைந்தெய்தும் அழிவில் கூட்டமாகிய கற்பொழுக்கத்திற்கு உரிய வற்றுள் சிறப்புடையவற்றைத் தொகுத்து இவையும் மேலனபோல மெய்ப்பாடு தோன்றுதற்குரிய பொருளாகும் என்கின்றது.

பொருள்:- தெய்வம் அஞ்சல் முதலாக மறைந்தவை உரைத்தல் ஈறாயவை புறஞ்சொல் மாணாக்கிளவியொடு கூடிச் சிறந்த அப்பத்தும் மேற்கூறிய அழிவில் கூட்டத்திற் குரிய பொருளாகும்.

செவ்வெண்ணாக நிற்கும் தெய்வமஞ்சல் முதலிய ஒன்பத்திற்கும் எண்ணும்மை விரித்துக் கொள்க. ஏகாரம்-இசை நிறை.

தெய்வப் புணர்ச்சி முதலாக நிகழும் களவின் வழிவந்த வரைந் தெய்தும் அழிவில் கூட்டத்திற்கும், உள்ளப் புணர்ச்சியளவசளே தமரான் வரைந்தெய்தும் அழிவில் கூட்டத்திற்கும் இவை ஒப்ப உரியவாக அமைந்து வருதலின் 'சிறந்தபத்து' என விதந் தோதினசர் என்க.

இவைபத்தும் மன்னிய வினைக்கு நிமித்தமாகாமல் மன்னிய வினையின்கண் நிகழ்வன வாய்க் கற்பொழுக்கத்திற்குச் சிறந் துரிமை பெற்று வருதலான் மேலனவற்றொடு ஒருங்கோதாமல் பிரித்தோதப்பட்டன என்க.

மாணாத புறஞ் சொற்கிளத்தல் குடிமை சான்ற தலைமக்கட்கு ஒவ்வாது, சிறுபான்மை நிகழும் என்பது தோன்றப் பிரித்துக்கட்டப் பட்டதென்க.

ஈண்டுக் கூறிய இப்பொருள் பத்தும் கற்பியலுள் தலைவற் குரியவாக ஓதப்பெற்ற முப்பத்து மூன்று கிளவிகள் பற்றியும் தலைவிக்குரியவாக ஓதப்பெற்ற பத்தொன்பது கிளவிகள் பற்றியும் வரும் பண்பும் செயலுமாகிய உணர்ச்சிகளுள் மெய்ப்பாடு தோன்றுதற்குரிய சிறப்புடைய பொருள்கள் என்றதனான் அத்துணைச் சிறவாமல் வரும் பொருள்களும் உள என்பதும் அவை சிறுபான்மைய என்பதும் கொள்ளப்படும்.

ஊடலும் கூடலுமாகிய காம ஒழுக்கத்துள் கற்பிற்கு ஊடல் சிறந்துரிமை பெற்று வருமாகலின் தெய்வமஞ்சல் முதலிய இப் பொருள்கள் ஊடலை அடிப்படையாகக் கொண்டு அமையும் என்பது உய்த்துணரப்படும். இவற்றுள் ஏற்பவை தலைவற்கும் உரியவாக வருமென்க.

1. தெய்வமஞ்சலாவது:- களவின் கண்ணும் வரைவின் கண்ணும் "பிரியேன் பிரியின் தரியேன்" எனச் சூளுரைத் தலைவன் கற்பின் கண் பொதுவாக ஓதல் முதலியவற்றின் கண்ணும் சிறப்பாகப் பரத்தையில் கண்ணும் பிரிந்த

வழி அச்சூளுரை காரணமாகத் தலைவற்கு ஊறுநேருங் கொல் எனக் கருதி முழு முதற் பொருளல்லாத தத்துவப் பொருளாகவும் கிளவியாக்கத்துள் தெய்வஞ் சுட்டுவனவாகவும் கூறப்பெற்ற தெய்வங்களைத் தலைவி அஞ்சுதலாம். பரவுதல், வேண்டல் என்றாற் போலக் கூறாமல் அஞ்சுதல் எனக் கூறியமையான் தெய்வம் என்றது சிறுதெய்வங்கள் என்பது பெறப்படும்.

எ.டு :- "சினை வாடச் சிறக்குநின் சினந்தணிந்தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறலியையவதோ"

எனவும்

முளிமுதல் மூழ்கிய வெம்மை தீர்ந்துறுகென
வளிதரு செல்வனை வாழ்த்தவும் இயைவதோ
(கலி-16)

எனவும்

அச்சாறாக உணரிய வருபவன்
பொய்ச்சூளஞ்சிப் புலவேனாகுவல் (கலி.75)

எனவும் வரும்.

பிறவும் சான்றோர் செய்யுட்களுள் கண்டு கொள்க.
இஃது அச்சமென்னும் மெய்ப்பாட்டிற்குப் பொருளாக அமையும்

2. புரையறந்தெளிதலாவது ; இல்லற வாழ்க்கை என்பது கொண்டானை உவப்பித்தலும் மக்கட்பேறெய்தலுமாகிய இவையே யன்றி இயல்புடைமூவர்க்குத் துணைபுரிதலும் ஐம்புலத்தாறு ஓம்பலும் பிரிவிடையாற்றலும் பிறவும் உயர்ந்த அறமென தெளிந்து ஒழுகுதலாம்.

எ.டு :- விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூளஞ்சவும்
அரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்
ஆங்கவிந்தொழுகுமென் புலவிதாங்காது
அவ்வவ்விடத்தான் அவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ்சிதைக்கும்
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் தோழி கடன் நமக்கெனவே (கலி - 75)

எனவும்

ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

நாவலர் நாட்டார் ஐயாவின்,
நலமிகு கற்பிக்கும் திறன் !

சித்தாந்த கலாநிதி

திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

முன்னுரை :

இவ் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்து மறைந்தருளிய தமிழ்ப்பெருஞ் சான்றோர்களின் வரிசையில், குறிப்பிடத்தக்க பெரும் சிறப்புக்கு உரியவராகப் பிறங்கியருளிய வர்களுள், நம் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய நாவலர் நாட்டார் ஐயா (1834—1944) அவர்களும் ஒருவர் ஆவர் ! அவர் களுடைய பல்வேறு சிறப்புக்களையும் ஒருங்கெடுத்துக் கூறல், எவர்க்கும் அரிது. அவர்களின் அளவற்ற அருட்பெருந் தண்ணளி களுக்கு உரியவனாகும் பேறு, எனக்கு எவ்வாறோ இறையருளால் எளிதாக வாய்த்தது !

கரந்தைப் புலவர் கல்லூரி :

அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரியின் மதிப்பியல் தலைவராக விளங்கி வந்தார்கள். ஆதலின் எப்போதேனும் ஒருசில மாதங்களுக்கு ஒருமுறை கல்லூரிக்கு எழுந்தருளி, ஒவ்வொரு வகுப்பையும், சில மணித்துளிகள் பார்வையிடுவார்கள். அவர் களால் நீண்டநேரம் பேசுதல் இயலாது. ஒரு சில சொற்கள் தான் பேசுவார்கள். அப்பொழுது, வகுப்புக்களில் நடக்கும் பாடங்களை யொட்டிச் சில வினாக்களை எழுப்பி, மாணவர்கள் விடை தெரியா மல் விழிக்கும் போதெல்லாம், சில சொற்களில் விளக்கவுரை நிகழ்த்துவார்கள். அதன் அருமை பெருமைகளைப் பல மாணவர் கள் அறிவதில்லை. ஆனால் எப்படியோ அவைகள், என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து, இன்றளவும் எவ்வளவோ பெரிய அரும்பெரும் பயன்களை விளைவித்து வருகின்றன !

வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம் :

ஒருசமயம் புலவர் இடைநிலை வகுப்பின் முதலாண்டில் (Preliminary First year) பயின்று கொண்டிருந்தபொழுது, அவர் கள் எங்கள் வகுப்பிற்கு எழுந்தருளினார்கள். அப்பொழுது திருவிளையாடற் புராணத்தில் "வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்" என்னும் பாடம், நடந்து கொண்டிருந்தது.

அதன்கண்,

"கிளர்ந்த காலினால் அங்கியை நிமிர்த்து, மேற்கிடைத்து,
வளர்ந்த பிங்கலை—இடை—நடு, வழிஉகும் மதியின்
விளைந்த இன்னமுது உண்டு; நம் விடையவன் வடிவம்,
குளம் தனிற்குறித்து, அவன்உருக் கொண்டவர் இவர்காண்!"

என்னும் ஒரு பாடல் வருகின்றது. யோகநெறி கடைப்பிடித்து; அதன் பயனாகச் சாரூபம் என்னும் பதமுத்தி பெற்றவர்கள், சிவ லோகத்தின் ஒருபகுதியில் இருப்பதனை வரகுண பாண்டியனுக்குத் திருநந்திதேவர் காட்டுகின்றார். அதனை அப்பாடல் உணர்த்து கின்றது. மிக சிறந்த அழகிய, சைவசித்தாந்த நுண்பொருள் அமைந்த அப்பாடலின் 'பொருள் யாது ?' என ஒருசில மாணவர் களை, நாட்டார் ஐயா அவர்கள் வினவினார். ஆனால் அந்தோ ! அதற்குச் சரியான விடையினை மாணவர்கள் எங்ஙனம் கூறுதல் இயலும் ?. அதனால் அதன் நுண்பொருளை, ஐயா அவர்களே ஒருசில சொற்களில், விளக்கியருளியுள்ளார்கள் :

பொருள்நலம் :

"மேல்எழுந்த பிராணவாயுவினால், மூலாதாரத்தில் உள்ள நெருப்பினை மேலே எழுப்பி, மேற்சென்று, வளர்ந்த வலது நாடிக்கும், இடது நாடிக்கும், நடுவில் உள்ள சுழுமுனை நாடியின் வழியாகச் சொரிகின்ற, சந்திர மண்டலத்தின் அமுதினை அருந்தி, நம்முடைய விடைக்கொடியும் ஊர்தியும் உடைய சிவபெருமானைக் தமது நெற்றியில் (புருவ நடுவில்) தியானித்து, அதன் பயனாக யோகநெறிக்குரிய சிவசாரூபம் என்னும் பதமுத்தி பெற்ற யோக நெறியாளர்கள், ஆகிய இவர்களைக் காண்க"

என்பது இதன் பொருள். யோகநெறி கடைபிடிப்பவர்கள், சிவ சாரூபம் என்னும் பதமுத்தி பெறுவார்கள் என்பதனைச் சிவஞான சித்தியார், எட்டாம் சூத்திரம் கூறுகின்றது. (பாடல் எண், 273).

குறிப்புரை :

கிளர்ந்த - மேல்எழுந்த ; காலினால் - பிராணவாயுவினால் ; அங்கியை - மூலாதாரத்திலுள்ள நெருப்பினை ; நிமிர்த்து-மேலே எழுப்பி ; மேற்கிடைத்து - மேற்சென்று ; பிங்கலை - வலதுநாடி ; இடை - இடது நாடி ; நடு - இவ்விரண்டிற்கும் நடுவேயுள்ள சிறு சுழுமுனையின் ; வழிஉகும் - வழியாகச் சொரிகின்ற ; மதியின் - சந்திரமண்டலத்தில்; இன்னமுது-தாரைகளை; உண்டு-அருந்தி , விடையவன் - சிவபெருமான் ; குணம் - நெற்றி (புருவ நடு) ; அவன்உரு - சிவபெருமானின் சாரூபம் ஆகிய பதமுத்தி

'குளம்' எனும் சொல் :

இப்பாடலில் வரும் "குளம்" என்னும் சொல், நெற்றி அல்லது புருவநடுவைக குறிக்கும் என்பதை, ஐயா அவர்கள் விளக்கியருளினார்கள். அப்பொருள் மாணவர்களின் மனத்தில் நன்றாகப் பதிவதற்காகப் பொருத்தமான ஒரு மேற்கோட்பாடலையும் எடுத்துக் கூறினார்கள் :

பிரபுலிங்கலீலை :

'பிரபுலிங்கலீலை' என்னும் வீரசைவப் பெருநூலில், அல்லமதேவர், விமலை என்பவள் சிவபெருமானைப் பூசித்து, அப்பூசையின் ஒரு பகுதியாக, அவரை மகிழ்விக்க நடனக்கலையின் நுட்பத் திறமெல்லாம் விளங்க, ஆடி வழிபடுகின்றாள். அந்நிலையில் அவளுடைய நடனத்திற்கு ஏற்ப, மத்தளம் (தண்ணுமை) வாசிப்பவராக மாறுவேடம் கொண்டு அல்லமாப்பிரபு வருகின்றார். 'கொண்ட கோலத்திற்கு ஏற்ப நடித்தல்' முறைமையாதலின், அவர் ஒரு மத்தளக்காரன்போல, மாறுவேடம்புனைந்து, தம்மை மறைத்துக் கொண்டு வருகின்றார். மத்தளக்காரர்கள் தம் நெற்றியில் (புருவநடுவில்), ஒரு சிறிது பெரிய அளவில் கறுப்புப் பொட்டு வைத்துக் கொண்டிருப்பார்கள். அவ்வாறே அல்லமாப் பிரபுவும் வைத்துக் கொண்டிருந்தார்.

அல்லமாப்பிரபு :

அல்லமாப்பிரபு வேறு, சிவபெருமான் வேறு அல்லர். சிவபெருமான் களத்தில் (கழுத்தில்) ஆலாலம் என்னும் நஞ்சின் அடையாளமாகக் கருமை நிறம் உடையவர். ஒன்றனை மறைக்க விரும்புவார்கள், எல்லோரும் காணும்படியாக வெளிப்படையான களம் என்னுமிடத்திலுள்ள ஒரு பொருளை, எடுத்துக் குளத்தினில் போட்டு மறைத்துவிடுவார்கள்! அந்நிலையில் அல்லமதேவரும், தம் களத்தல் இருந்த கறுப்பினைக் குளத்தில் எடுத்துப் போட்டு விட்டார். அதாவது, உள்ள-ஆலால நஞ்சு உண்டதனால் ஏற்பட்ட கறுப்பினைக் குளமாகிய நெற்றியில் (புருவநடுவில்) எடுத்துப் போட்டுப், பொட்டாக அணிந்து கொண்டார் என்பது, கருத்து. "களத்தில் இருப்பதைக் குளத்தில் போடு" என்பது ஓர் உலகியற் பழமொழி. இதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர், பின்வருமாறு அழகுறக் குறிப்பிடுகின்றார் :

"களத்திடை இருப்பின் உண்மை காண்குவர் என்ன,
ஆலம்
குளத்திடை வாங்கி வைத்த கொள்கைபோல்
திலதம்தீட்டி

ஒளித்தனி மதிதன் பாங்கர் உரோணியோடு
ஒருபெண்கூட்டி,
அளித்துற வைத்தது என்ன, அணிமணி செவிக்கு
அணிந்தாள்!"
—பிரபுதேவர் வந்த கதி, 8.

என்னும் பாடலை, நாட்டார் ஐயா அழகுற எடுத்துக் காட்டி விளக்கினார். ஐயா அவர்கள் விளக்கிய பொருளின் நுட்பத்தினை மற்ற மாணவர்கள் எவ்வாறு உணர்ந்தனர் என்பது, எனக்குத் தெரியாது.

கையறு நிலைக் கவிதை :

ஆனால், நாற்பது (40) ஆண்டுகள் கழிந்தும், அப்பாடலும், பொருள் விளக்கமும் என்னுள்ளத்தில் பசுமையாகப் பதிந்துள்ளது. அதனால், ஐயா அவர்கள் மறைந்தபொழுது, 'கையறுநிலைக் கவிதை' ஆக யான் இயற்றிய பாடலில், பின்வருமாறு அந் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளேன்.

"குளம் என்னும் சொல்லினுக்கு நெற்றியெனப்
பொருள் கூறிக், குணக்குன் றேஎம்
உளங்கொளற்க 'அல்லமனா உருமாறிச்
சிவபெருமான் ஒண்பொட் டொப்பக்
களங்கொண்ட கறையினையே குளஞ்சேர்த்தான்!
என்றுநற்பா மேற்கோள் காட்டி,
வளங்கெழும விரித்துரைத்தாய்! மகிழ்வுரைகள்
தெளிந்தநீ, மறைந்தாய்! ஐயோ!"

என்னும் பாடல், 1944 ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் வெளிவந்துள்ளது.

முடிவுரை

இங்ஙனம் நாவலர் நாட்டார் ஐயா அவர்கள் கூறியருளிய பொருள்கள் மற்றும் பற்பல என் உள்ளத்திற் பதிந்துள்ளன. அவை களைப் பற்றியும், அவ்வப்பொழுது சமயம் நேரும்போது காண்போமாக!

கட்டுரையாளர்க்கு...

தாங்கள் தமிழ்ப்பொழிலுக்கு அனுப்பும் ஆய்வுக் கட்டுரையை முழுநீளத் (Fool scap) தாளில், அடிக்குறிப்புகள் அவ்வப்பக்கத்தின் கீழ் அமையுமாறு தட்டச்சுச் செய்து இரண்டு படிகள் அனுப்பி யுதவுக.

திராவிட மொழிகளின் தொல்லகராதிகள்

'அறிவன்' மா. சற்குணம், எம். ஏ.,

இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் திராவிட மொழிகள் என்னும் மொழிக் குடும்பம் தொன்மையும் நன்னீர்மையும் மிக்க இரண்டாவது மிகப் பெரிய மொழிக் குடும்பமாகும். திராவிட மொழிகள் இருபத்து மூன்றுக்கு மேற்பட்டுள்ளன. இவற்றுள் இலக்கிய இலக்கண வளமுடையன சிலவேயாம். ஒரு மொழியின் சிறப்பை அதன்கண் தோன்றியுள்ள திட்டமிடப் பட்ட அகராதி களைக் கொண்டுமறியலாம். திராவிட மொழிகளில் ஒரு சிலவே அகராதித் துறையில் தொன்மையானே நூல்கள் சிலவற்றைப் பெற்றுள்ளன. அவற்றைக் குறித்து மதிப்பிட முற்படுவதே இக் கட்டுரை வரைவதன் நோக்கம்.

திராவிட மொழிகளை ஆய்வாளர்கள் மூன்று பெரும் பிரிவாகப் பகுத்துள்ளனர். தென் திராவிடம், நடுத் திராவிடம், வட திராவிடம் என்பனவே அவை. தென் திராவிட மொழிகளில் தமிழ், கன்னடம் ஆகியவையும், நடுத்திராவிட மொழிகளில் தெலுங்கும், மட்டுமே அகராதித் துறையில் தொன்மையான நூல் களைப் பெற்றுள்ளன. வட திராவிட மொழிகளில் பண்பட்ட மொழிகள் எவையும் இல்லை. ஆதலால், அவற்றுள் குறிப்பிடத் தக்க அகராதிகள் ஏதும் தோன்றவில்லை.

மூல திராவிடத்தின் தன்மைகளை மிகுதியும் பெற்றுள்ள மொழி தமிழேயாகும். நந்தமிழ் மொழியில் தொன்மையான காலத்திலேயே அகராதிப் பணி தொடங்கி விட்டது. தொல்காப்பியம் உரியியலை நோக்குங்கால் சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பேயே அகராதித் துறையில் நாம் அடியெடுத்து வைத்துள்ளோம் என்பதை அறிந்து பெருமைப் படலாம். அகராதித் துறையின் கூறுகளை அதன்கண் நாம் காண்கிறோம்.

தனிப்பட்ட அகராதிகள் என்ற வகையில் தோன்றியவற்றுள் தமிழில் குறிப்பிடத்தக்கவை நிகண்டுகளாகும். நிகண்டுகள் என்பன மொழியில் உள்ள சொற்களுக்குப் பொருள் கூறும் வகை யில் எழுதப்பட்ட செய்யுள் வடிவிலான நூல்களாகும். தமிழில் இத்தகைய நிகண்டுகள் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு முதலாகவே கிடைத்து உள்ளன,

சேந்தன் திவாகரம் என்பதே தமிழில் கிடைத்த முதல் நிகண்டாகும். திவாகர முனிவர் என்பவரால் செய்யப் பெற்ற இந் நூல் சுமார் 9500-க்கு மேற்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறு கிறது. ஒரு பொருள் குறிக்கும் பல பெயர்ச் சொற்கள், பல பொருள் குறிக்கும் ஒரு பெயர்ச் சொற்கள், மற்றும் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்ச் சொற்கள் என்ற மூன்று வகையில் சொற்கள் பொருண்மை சுட்டப்பெற்றுள்ளன. திவாகரத்தை அடுத்து பிங் கலந்தை என்ற நிகண்டு தோன்றியது. நூலின் அமைப்பில் முன்னூலுக்கு இது மாற்றம் பெற்றுள்ளது. சொற்களின், எண்ணிக்கையில் மிகுதியினை இதன்கண் காணலாம். இவற்றை அடுத்து உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலியன பின் வந்த நூற்றாண்டுகளில் தோன்றின. இவற்றுள் யாப்புக்களும், நூலின் உட்பிரிவுகளும், வேறுபட்டிருப்பினும் எளிமையை நோக்கி அகராதிக்கலை மெல்ல நடை பயின்றுள்ளமையைக் காணலாம்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் *புலியூர் சிதம்பர ரேவண சித்தர்* என்பவர் *அகராதி நிகண்டு* என்ற நூலினைச் செய்தார். தமிழில் முதன் முதலில் அகர நிரலில் சொற்களை அமைத்துப் பொருள் கூறிய அகராதி இதுவேயாகும். இதன் கண் சொற்கள் முத லெழுத்து அளவில் மட்டுமே அகர நிரற்படுத்தப்பட்டுள்ளன. இதன் பின்பு தோன்றிய பொதிகை நிகண்டில் முதல் இரண்டெ ழுத்தளவில் சொற்கள் அகர வரிசைப் படுத்தப் பட்டுப் பொருள் கூறப் பெற்றுள்ளன. இவ்வாறு சிறிது சிறிதாக அகராதிக்கலை வளர்ந்து வந்த அக்காலத்திலேயே சொற்களின் எண்ணிக்கை யிலும் அவற்றிற்குரிய பொருள்களிலும் நிறைய வளர்ச்சி இருந்தது என்பதை நன்கு அறியலாம்.

ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களைச் சுட்டிய தனி இயல் பிற்காலத்தில் கண் நிகண்டு நூலாகத் தோன்றியமையும், குறிப் பாகப் பதினோராம் தொகுதி பற்பல பதிப்புகளைக் கண்டமையும் கண்கூடு. அரும்பொருள் விளக்க நிகண்டு, நாநார்த்த தீபிகை வேதகிரியார் சூடாமணி, சிந்தாமணி நிகண்டு, விரிவு நிகண்டு ஆகியன இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை.

இதைப் போன்று நிகண்டுகளின் முதல் வகையில் ஒரு பொருள் குறிக்கும் பல பெயர்த் தொகுதிகளின் வளர்ச்சியாக நாமதீப நிகண்டு, 12000 சொற்களுக்குப் பொருள் தருவதாகத் தோன்றி யமையும், தொகைப் பெயர்களைக் குறிக்கும் நிகண்டுகளாகப் பொருள் தொகை நிகண்டு விரிவு நிகண்டு போன்றவை தோன்றி யமையும் குறிப்பிடத் தக்கனவாகும். கி. பி 17- ஆம் நூற்றாண்டில்

தமிழகம் போந்த பெஸ்கி பாதிரியார் சதுரகராதி செய்ததை ஆய்வுலகம் நன்கு அறியும். மேலை நாட்டார் வருகை புரிந்த இக்காலம் முதல் சொற்களின் எல்லா எழுத்துக்களையும் நோக்கி அவற்றை அகர வரிசையில் அமைத்து அவற்றுக்குரிய பொருள் களையும் தனித்தனியே சுட்டுவதாகிய அகராதி முறை தோற்றம் பெற்றுவிட்டது எனலாம். அதுவரை ஒரு மொழி அகராதிகள், 'நிகண்டு' என்ற பெயரோடு தோன்றிய நிலைக்கு மாறாக ஐரோப்பியரின் வருகை இரு மொழி அகராதிகள் (Bilingual Dictionaries) நிறையத் தோன்றுவதற்கு வழி வகுத்தது. அறிவியல் அடிப்படையிலான பிற்கால அகராதிகளுக்கு இதுவரை சுட்டப் பெற்ற நிகண்டுகளின் வளர்ச்சியே பாதை வகுத்தது என்பதே உண்மையாகும். சுமார் 50-க்கும் மேற்பட்ட தமிழ் நிகண்டுகள் மொழி, மருத்துவம், கணியம் (astrology) போன்ற பல துறைகளிலும் தமிழின் சொல்லகராதிகளாகத் தோன்றி மொழி வளத்தைக் காத்துள்ளன,

கன்னடம் :

தென் திராவிட மொழிகளில் பழமையான மற்றோர் மொழி கன்னடமாகும். தெலுங்கோடு ஒப்பிடுகையில் கன்னட மொழியில் மிகப் பழங்காலத்திலேயே அகராதி நூல்கள் தொடங்கிவிட்டன எனலாம். புகழ் வாய்ந்த கன்னடக் கவிஞர் ரன்னா என்பவரை (கி.பி. 990) இத்துறையின் முன்னோடி என்பர். அவருடைய படைப்பாகிய 'ரன்னகண்ட' என்பதே கன்னட மொழியின் தொன்மையான அகராதியாகும். அது நன்கு புகழ் வாய்ந்தகாக கண்டயாப்பில் பழங் கன்னடத்திற்கு ஏற்ற வகையில் செய்யப் பெற்றது. ஆனால் போகூழின் காரணமாய் அந்நூல் இதுவரை முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. பெரும்பாலான அதன் பகுதிகள் இழப்புக்குள்ளாயின. கிடைக்கப் பெற்ற பகுதியிலும் அகராதிக்குரிய பொருள்கள் ஒரு முறைப் படியான அமைப்பில் திரல் பட உள்ளனவாகக் தெரியவில்லை

பழங் கன்னடத்தில் தோன்றிய பெரும்பாலான சம்பு (உரை யிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுள்) காவியங்கள் மிகுதியாக வட மொழிச் சொற்களைக் கொண்டு உள்ளன. அதனால் வட சொற்களுக்குக் கன்னடத்தில் பொருள் உரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தேவை முதன் முதலாக 2 - ஆம் நாகவர்மர் என்பவரால் கி. பி. 1145 – இல் செய்யப் பெற்ற அபிதான வஸ்து கோஸம் (abidhana vastu kosa) என்ற நூலாலும், ஹலாயுதரின் அபிதான ரத்தினமாலை (abidhana

ratna mala) என்பதற்கு ஆக்கிய கன்னட உரையாலும் நிறைவேறியது.

அடுத்து ஒரு மொழி அகராதி ஒன்று சுமார் கி. பி. 1260-ல் கேசிராஜன் என்பவரால் செய்யப் பெற்ற சப்தமணி தர்ப்பனா என்ற நூலின் சில பிரிவுகளில் அமைந்திருப்பதைக் காணலாம், சப்தமணிதர்ப்பனா என்பது சிறந்ததோர் இலக்கண நூலாகப் போற்றப்படுகிறது. அதன் பதினாவது பகுதி சுமார் 233 அரிய சொற்களுக்குப் பொருள் தருவதாக அமைந்துள்ளது.

இதையடுத்துச் சுமார் கி.பி. 1400-இல் கர்நாடக சப்தசாரம் என்ற அகராதி உரைநடையில் தொகுத்தளிக்கப் பெற்றது. இதன்கண் 1416 சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. மங்கராஜன் என்பவரால் கி பி 1398 இல் அபிநவாபிதானம் என்ற ரிகச் சிறப்பு வாய்ந்த நூல் ஒன்று சமஸ்கிருதச் சொற்களுக்குக் கன்னடத்தில் பொருள் தருவதாகச் செய்யப்பெற்றது. இவ் வகராதி வார்த்தக சட்பாதி என்ற யாப்பில் ஆக்கப் பெற்றுள்ளது.

கி பி. 1400-இல் கந்தயாப்பு என்ற செய்யுள் நடையில் கப்பிகரகைபிடி (kabbigarakaipidi) என்ற மற்றுமோர் அகராதி எழுந்தது. வீர சைவக் கவியான சதுராசிய பொம்மராஜர் என்பரால் கி.பி. 1450-இல் சதுராசகிய நிகண்டு என்ற நூல் செய்யப் பெற்றது. இது 64 கந்தயாப்புச் செய்யுட்களால் அமைந்தது.

கப்பிகரகைபிடி என்ற பெயரிலேயே இரண்டவதாக ஒரு அகராதி கி பி 1530-இல் லிங்கமந்திரி என்ற வீரசைவக் கவிஞரால் செய்யப் பெற்றது. இது வார்த்தகசட்பதி என்ற யாப்பில் அமைந்த நூலாகும்.

சுமார் கி பி 1560 வாக்கில் வீரபடதோண்டதார்யர் என்பவரால் கர்நாடக சப்தமஞ்சரி என்ற பெயரில புதுக்கன்னட அகராதி (Halagannada lexicon) ஒன்று தொகுக்கப் பெற்றது. இதில் வடமொழிச் சொற்களுக்கான பொருளும், திரிந்த கன்னடச் சொற்களுக்குச் சரியான சொற்களின் வடிவங்களும் முறையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. கி.பி. 1600 அளவில் வார்த்தக சட்பதி யாப்பில் அமைந்த இன்னொரு செய்யுள் சஞ்ஜீவன (ம்) என்ற பெயரில் சிருங்காரகவி என்பவரால் தொகுத்தளிக்கப் பெற்றது.

ஆங்கில அகராதிகளைப் போலக் கன்னட அகராதிகளைச் செய்வது 19- ஆம நூற்றாண்டில் தான் தொடங்கியது. சொற்கள் முழுமையும் அகர நிரல படுத்தப்பட்டுப் பொருள் தரும் அகராதிகள்

ரீவ்ஸ், கிட்டல் போன்றோரால் தொடங்கப்பட்டன. பின்னரே வரலாற்று அடிப்படையில் கன்னட அகராதி ஒன்று வெளியிட வேண்டுமென்ற வியத்தகு பணியைக் கன்னட சாகித்ய பரிஷத் மேற்கொண்டது. இத்தகு தற்கால அகராதிகட்கு வழிகாட்டிய பெருமை இதற்கு முன் குறிப்பிடப்பெற்ற கன்னட மொழியின் சொல்லகராதிகட்கே உரியதாகும்.

தெலுங்கு :-

வடமொழி அகராதிகளைப் போலவே தெலுங்கு அகராதி களிலும்

தேவ — Divine beings
மானவ — Human beings
திர்யக் — Non-human beings
நாநார்த்த — Homonyns

ஆகிய நான்கு பிரிவுகள் உள்ளன. வடமொழி அகராதிகளில் அமர நிரல் முயற்சி மேற் கொண்ட பின்னர்த் தெலுங்கிலும் பிற்கால அகராதிகள் அகர நிரல் ஆக்கப் பெற்றன.

தெலுங்கு மொழியின் கண் கோசங்கள் (Kosas) என்ற வகையில் எழுந்த நூல்களில் எட்டு அகராதிகளை முக்கியமாகக் குறிப்பிடுவர். முதன் முதலாக எழுந்தது. கி. பி. 1600 - இல் பைடிபாடி லட்சுமண கவி என்பவரால் எழுதப் பட்ட ஆந்திர நாம சங்கிரகம் (Andra nama Sangrahamu) என்பதாகும். இதையடுத்து கி. பி. 1650 - இல் இரு நூல்கள் தோன்றின. வெங்கடேச நிகண்டு என்பது 100 சீசபதியங்களைக் (Sisapadyas) கொண்டதாக எழுந்தது. கவி சௌடப்ப சீசமுலு என்ற நூல் இராயல சீமையின் வழக்காற்று வடிவங்களைக் கொண்டதாக 32 பாடல்களால் இயற்றப்பட்டது. 1740 இல் சாம்ப நிகண்டு (Samba nighantuvu) என்ற நூலும் 1780- இல் ஆந்திர பாஷாநவமு (Andrabasha navamu) என்ற நூலும் வெளியாகின்றன. பிந்தியதை இயற்றியவர் வெங்கடகவி என்பவர். இந்நூல் மூன்று காண்டங்களையுடையது. மேலும் இந்நூல் தெலுங்குச் சொற்களுக்கு இணையாக வட மொழிச் சொற்களைத் தருகிறது. மேலும் இது 'ஆந்திரமதமு' என்று அவர்களால் போற்றப் பெறுகிறது.

கந்த பதியங்களில் ('சர்வாந்திரசார சங்கிரஹமு' (Sarvandra-sara sangraharam) என்ற நூல் 1860- இல் தொகுத்தளிக்கப் பெற்றது. பல்வேறு விருத்தப் பாக்களில் ஆந்திர பிரபாகரமு (Andra prabha karamu)

என்ற பெயரில் ஒரு அகராதி 1880-இல் வெளியிடப் பட்டுள்ளது. ஆந்திர பதநிதானமு (Andra pada nidanamu) என்ற பெயரில் 1900 இல் வெளி வந்த நூலே அதுவரை வெளி வந்தவற்றுள் மிகப் பெரிய அகராதியாகும்.

இந்தியாவை ஆங்கிலேயர் ஆளத் தொடங்கிய பிறகு அவர்கள் இம்மரபுவழிச் செய்யுள் வடிவிலமைந்த நிகண்டுகளைப் பயன் படுத்துவது அரிது என்றறிந்த பின் அகர நிரலில் அமைந்த அகராதிகள் அனைவருக்கும் பயன்படுமாறு ஆக்கப்பட்டன. அவர் களால் தொகுத்தளிக்கப் பெற்ற அகராதிகள் பல நிகண்டு என்ற பெயரோடு அமைந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கன ஜெண்டு நிகண்டு (Jentu Nighantu 1770,) வில்லியம் பிரௌன் நிகண்டு (William Brown nighantu) 1818 காம்பெல் நிகண்டு (Campbell nighantu) மோரீஸ் நிகண்டு Morry's nighantu) இவற்றுள் வில்லியம் பிரௌன் நிகண்டு பல சிறப்புக் கூறுகளைப் பெற்றுள்ளது. பேச்சு வழக்குச் சொற்களும் இலக்கியச் சொற்களோடு இதில் இடம் பெற்றுள்ளன. வேர்ச்சொல் குறிப்புகளும், புலவர்களின் சொல்லாட்சி மேற் கோள்களும் காட்டப்பட்டுள்ளன. இதில்தான் முதன் முதலாகப் பழமொழிகளும் வழக்கு நடைத் தொடர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை ஆங்கிலத்தில் தருவதுடன் இலக்கிய ஆட்சிக்கும் பேச்சு வழக்குக் கும் எடுத்துக்காட்டுகள் உள.

சொற்களுக்கு ஆங்கிலத்தில் பொருள் தருவதன்றித் தெலுங்கு மொழியில் மட்டுமே பொருள் தருமாறு ஒரு மொழி அகராதிகள் (Manolingual dictionaries) பல தோன்றி யுள்ளன. 1816 இல் மாமிடி வெங்கடாசாரியரர் என்பவரால் ஆக்கப் பெற்ற ஆந்திரதீபிகை இவ்வகையில் மிகவும் குறிப்பிடத் தக்க தாகும். இதைப் போன்று கி. பி. 1850 இல் தோன்றிய சின்னைய சூரி நிகண்டு என்ற அகராதியும், 1895 இல் பஹூஜனபள்ளி சீதாராமையசாரியர் என்பவரால் செய்யப் பெற்ற சப்தரத்தினாகரம் என்ற அகராதியும் சிறப்பானவையாகும். பின்னது பல தனிச் சிறப்புகள் பொருந்தியதாதலால் நிறைய பதிப்புக்களைக் கண்டுள்ளது. இவ்வாறு தெலுங்கு மொழியில் தொல்லகராதிகள் எண்ணிக்கையில் பெருகி வந்தன.

மலையாளம் :

தென் திராவிட மொழிகளில் தமிழோடு மிக நெருங்கிய தொடர்புற்றிருந்தது மலையாள மொழியாகும். இலக்கிய வளத்தில்

ஆயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட தொன்மைச் சிறப்பு இம்மொழியின் கண் அமைந்திருந்தாலும், இதனிடத்து கி பி. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை எந்த ஒரு அகராதியும் தோன்றவில்லை. மணிப் பிரவாள காலத்தில் மலையாளம் தனித்து வளர்ச்சியுறத் தொடங்கிய போது இது வடமொழிச் சொற்களோடு கலந்து தமிழினின்றும் பிரிந்து ஒரு தனி மொழியாக உருவாகியது. அச்சூழலில் வட மொழிச் சொற்களுக்கு வேண்டுமானால் அமர கோசம் முதலிய சமஸ்கிருத நிகண்டுகள் பொருள் தருவனவாய் அமைந்தன. ஆனால் அதற்கேயுரிய சொற்களுக்கும் வடமொழி தவிர பிற மொழிகளிலிருந்து வந்து கலந்த சொற்களுக்குமான பொருள்களை யறிய எந்தப் பார்வை நூல்களும் இல்லை. அக்காலத்தில் மக்கள் அன்றாடப் பேச்சு வழக்கினாலும் கல்விப் பயிற்சியினாலும் போது மான சொல்லாட்சியறிவைப் பெற்றிருந்தனர். எனவே நிகண்டுகள் அல்லது அகராதிகளின் தேவையை அவர்கள் உணரவில்லை

வெளிநாட்டினர், குறிப்பாகக் கிறித்துவர்கள் இந்நாட்டிற்கு வருகை தந்த பின்னர் அவர்கள் மதப்பிரச்சாரத்திற்காக மொழியைப் பயின்ற பின்னர்ப் பொருள் விளாங்காச் சொற்களின் பொருளை அனைவரும் அறியுமாறு அகராதிகளை ஆக்குவதில் ஆர்வம் காட்டினர் இவ்வகையில் கி. பி. 1846 இல் பெய்லி என்ற பாதிரியாரால் பதிப்பிக்கப் பெற்ற மலையாள ஆங்கில அகராதியே (Dictionary of high and colloquial Malayalam and English) முதன் முதலாக நம் நோக்கத் தைத் திருப்புவதாக அமைகிறது. அப்போதிருந்த திருவிதாங்கூர் ஸ்ரீ சுவாதித் திருநாள் மகாராஜா அவர்கள் பெய்லி பாதிரிக்குத் தேவையான உற்சாகத்தை அளித்தார்கள். பெய்லி மலையாள மொழியின் மிகுதியான சொற்களையும் பெரும்பாலான அமரகோசச் சொற்களையும் தொகுத்து அவ்வகராதியை உண்டாக்கி யிருப்பினும் அது அன்றைய பயன் பாட்டிற்குப் போதுமானதாக அமையவில்லை

மலையாளத்தில் இரண்டாவதாக எழுந்தது ஒருமொழி அகராதி யாகும். (Monolingual Dictonary) கி பி. 1865 இல் கோலின்ஸ் என்பவர் பதிப்பித்த அவ்வகராதி மலையாள மொழிச் சொற்களை மிகுதியாகப் பெற்றிருந்தது ஆனால் டாக்டர் குண்டர்ட் அவர்கள் கி பி. 1872-இல் தொகுத்து வெளியிட்ட மலையாள ஆங்கில அகராதியிலேயே அறிவியல் அடிப்படையில் திட்டமிடப் பட்டது எனலாம். சுமார் 1,50,000 சொற்கள் உள்ள அம் மொழியில் சுமார் 30000 சொற்களுக்கு மட்டுமே பொருள் தந்த அவ்வகராதியும் இன்றைய தேவைக்கு நிறைவானதாக அமைய வில்லை. அதன் பின்பு ஸ்ரீ கண்டேஸ்வரம் பத்மநாபப் பிள்ளை

1928 இல் தொகுத்து வெளியிட்ட சப்த தாராவளி என்ற ஒரு மொழி அகராதி 80,000 சொற்களுடன் கூடியதாகும். இத்துறையில் பணியாற்றியவர்களில் ஆர். நாராயண பணிக்கர், டி. ராமலிங்கம் பிள்ளை, ஜி. மாதவன் பிள்ளை. ஆகியோர் குறிப்பிடத்தக்கராவர், இவர்கட்குப் பின் இன்றைய இந்திய மொழிகளிலேயே மிகச் சிறந்த அகராதி (Lexicon) யாக மலையாள அகராதியைக் கேரளப் பலகலைக் கழகம் திட்டமிட்டு உருவாகியுள்ளது. மேற்கண்ட செய்திகளை உற்று நோக்குகையில் மலையாள மொழியில் தமிழைப் போல நிகண்டுகள் (Metrical lexicons) எவையும் தோன்றவில்லை என்பது எளிதில் புலனாகும். ஆனால் நிகண்டு என்ற சொல்லைப் பெயரளவில் தாங்கி அகராதிகள் சில மலையாளத்தில் தோன்றின. ஆயினும், அவை இக்கால அகராதி முறையில் அமைந்தவையே யாகும்.

இத் திராவிட மொழிகளின் தொல்லகராதிகளை நேர்க்குகையில் சில செய்திகளை எளிதில் நாம் அறிய முடிகிறது. அவை வருமாறு.

1. தமிழ் கன்னடம் ஆகிய இரு மொழிகளிலும் சுமார் கி. பி. 9; 10 ம் நூற்றாண்டுகளிலேயே அகராதிக்கலை தனித்து வளரத் தொடங்கிவிட்டது.

2. மலையாளம் தவிர்ந்த ஏனைய மூன்று மொழிகளிலும் சொல்லகராதிகள் என சுட்டப் பெறுவன நிகண்டுகளாகவே (Metrical lexicons) தோன்றியுள்ளன.

3. அகரநிரல் முயற்சி மேலை நாட்டவர் வருகைக்கு முன்பே திராவிட மொழிகளில் தோன்றிவிட்டது.

4. திராவிடத் தொல்லகராதிகள் எழுதுபொருள் வசதி குன்றியிருந்த அக்காலத்தில் மனப்பாடம் செய்வதற்கு ஏற்றாற்போல் பல்வகை யாப்புகளில் எழுந்துள்ளன.

5. பெரும்பாலான சொல்லகராதிகள் ஒரு மொழி அகராதிகளாகவே (Monolingual Dictionries) தோன்றின. ஆயினும் அவற்றுள் சமஸ்கிருதம் முதலிய பிறமொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன,

6. பிற்கால்த்தில் தோன்றிய அகரர்திகள் சிலவற்றுக்கும் திராவிட மொழிகளில் நிகண்டு என்ற பெயர் நூற் பெயரில் சேர்க்கப் பெற்றுள்ளதைக் காண்கிறோம்,

இதைத் தவிர மேலும் தொல்லகராதிகளில் இடம் பெற்றுள்ள சொல் மற்றும் பொருள் நிலைகளின் பல்வேறு உண்மைகளையும் கண்டறிய ஆழமான மொழியியல் நோக்கோடு தனித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுவது அவசியம்.

துணை நூலகள், கட்டுரைகள் :

1. Anantha Narayana H.S. Dravidian Lexicography, souvenir of XI all India Conference of Dravidian Languages, Usmania University, Hyderabad, 1981 PP 11-16.
2. Suranand Kunjan Pillai, M.A., on the Malayalam Lexicon, IX all India Conference of Dravidian Language Souvenir, University, of Calicut, 1979 PP 25-29.
3. Dravidian Languages and Literatures, Madurai Kamaraj University 1978.
4. சண்முகம் பிள்ளை. மு. நிகண்டு, கலைக்களஞ்சியம் தொகுதி 6, சென்னை, தமிழ் வளர்ச்சிக் கழகம், 1959, பக்கம் 437–441.

கடலில் மிதக்கும் சொற்கள்

பன்னெடுங்காலமாகவே கடலில் கலம் ஓட்டியும் கப்பல் செலுத்தியும் புகழ் பெற்றவர்கள். தமிழர்கள். பிற நாட்டோரோடு இவர்கள் கொண்ட தொடர்புக்குக் கடலும் ஒரு காரணமாகும். எனவே, கடலில் தாங்கள் செலுத்தும் பல வகைப் படகுகளுக்கும் கப்பல்களுக்கும் விதவிதமான பெயர்களை இவர்கள் பயன்படுத்தியதில் வியப்பில்லை படகு, கப்பல் வகைகளைக் குறிக்கத் தமிழ்ச் சொற்களாகவும் பிறமொழிச் சொற்களாகவும் ஏறத்தாழ நூறு சொற்களை இவர்கள் பயன்படுத்துகின்றனர். அவற்றுள் சில :

அம்பி, ஓடம், கட்டுப்பாணை, குல்லாத்தோணி
கைப்பரிசு, சங்காடம், சங்கதம், சதா, சுலுப்பு,
திமில், நாடுகலக்கி, பங்கிலி, பத்தேமாரி,
பாட்டிமார், பாரதி, மள்ளு, மேங்கா, வாரிரதம்.

"நன்றி, அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-1.

பெரியகுளத்துக் கல்வெட்டில் வரலாற்றுச் செய்திகள்

புலவர் து இராசகோபால்

அடிவேர் :-

பெரியகுளம்[1] இராசேந்திர சோழீச்சுரமுடைய நாயனார் திருக்கோயிலின் அகத்தும் - புறத்தும், கயிலாசநாதர் காடு 'உய்யவந்த ஈச்சுரமுடைய நாயனார் கற்றளியின் சுவரிலும் உள்ள, கல்வெட்டுகளைப் படியெடுத்து நேரில் வாசித்தறிந்தனவும், அரசினர் கல்வெட்டு அறிக்கைகளில் காணப்படுவனவும் ஆகிய வரலாற்றுச் சிதறல்களை இங்கு அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இறைவன் :-

இராசேந்திர சோழீச்சுரமுடைய நாயனார்
உய்யவந்த ஈச்சுரமுடைய நாயனார்
குளந்தை வேலநாத சுவாமி
வயிரவன்
திருவலஞ்சுழியுடைய நாயனார்
சோறுடை நாச்சியார்
இளைய பிள்ளையார்
பெரியகுளத்து நாயனார்
ஆறுமுகப்பெருமாள் தேவர்
செண்பகத் தேவர்
விநாயகப் பிள்ளையார்
வடுகப் பிள்ளையார்

மன்னர்கள் :-

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்
எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகர தேவன்
இம்மடி வயிறு நாயக்கர்

அரசியர் :-

உலக முழுதுமுடையாள்

---

* 1. பெரியகுளம் — மதுரை மாவட்டம்

நாடு :

மேல்நெடுங்கள நாடு
நெடுங்குள நாடு
சோணாடு
சீவல நாடு
துவாரபதி

வளநாடு :

விருதுராச பயங்கர வளநாடு

ஊர்கள்

புலியூர்
ஆலங்குளம்
தேசியறிய எறிவீர பட்டினம்
மதுரை
மாடக்குளம்
பொதுவில் புத்தூர்
திருவரங்குளம்
பெரியகுளம்
எறிபடை நல்லூர்
வேழகுலராம நல்லூர்
ஆதனூர்
எம்பல்
குளந்தை

மடம் :

மேலைமடம்

வரிவகைகள் :

பாடிகாவல்
பொன்வரி
செக்கிறை
கடமை
அந்தராயம்
இலாஞ்சனைப்பேறு
காரியவராட்சி
மனையிறை
இடப்பேறு
குடிமை

நில அளவைப் பெயர்கள் :-

மா

முக்காணி
மாகாணி
முந்திரி
அரைக்கால்

அரசியல் அலுவலரும் பிறவும் :-

திருமந்திரவோலை, திருவாய்க்கேள்வி, தேவகன்மி, மூவரனான விழுப்பாதரயன் (இவன் ஆவணித் திருவிழாவில் சுந்தர பாண்டியன் முடிசூட்டுநாளாகிய 7 ஆம் திருநாளில் அவரிடமிருந்து பொன்னெழுத்தாணியைப் பெற்று நாடோறும், கணக்கு வாசிக்கும் உரிமையுடையவர். பாண்டி பதினாலுக்கும் வேண்டிய விழுப்பாதரயன் என்ற ஒரு பழமொழி உண்டு. [அபிதான சிந்தாமணி பக் 1478]

சத்திய நிலை :-

நீர் வார்த்துக் கொடுத்தல்

நிலக்கிழார் :-

வனதேவன்
சேந்தன்தேவன்
காடுவெட்டிபன்மன்

பணமும்-விளக்கும்

பணம் — 40

உடையார்க்கு விளக்கு	1
முதலியார்க்கு	1
சோறுடை நாச்சியார்க்கு	1
இளைய பிள்ளையார்க்கு	1

ஆண்டும்/நாளும்

விரோதிகிருது வருஷம் தைமாசம் நாள் பத்து குரோதன வருஷம் பங்குனி மாதம் 22 தீ நாள் 200

தொழிலாளி :-

தச்சாச்சாரியன் குப்பை அப்பன்

கோத்திரம்

பாரத்துவாச கோத்திரம்

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

இதழ் வெளியீடுகள்

செய்தி மலர் —திங்களிதழ் தமிழ்க்கலை -முத்திங்களிதழ்
News Bulle tin —திங்களிதழ் Tamil Civilization -முத்திங்களிதழ்

கட்டண விவரம்

திங்கள் இதழ்

ஓராண்டு உ ரூ. 5 4 தாலர்
மூன்றாண்டு உ ரூ. 12 10 தாலர்

முத்திங்கள் இதழ்

ஓராண்டு உ ரூ 50 10 தாலர்
ஐந்தாண்டு உ ரூ 200 40 தாலர்

	நூல்கள்	பக்கம்	உரூ
1.	தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50		
	புலவர் செ. இராசு	356	150
2.	கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரை),		
	இ. வை. அனந்தராமையர் அடிக்குறிப்புடன்	1228	150
3.	சங்க இலக்கியக் கட்டுரைகள்-கருத்தரங்கம்	234	30
4.	ஆராய்ச்சித் தொகுதி		
	மு. இராகவையங்கார்	551	100
5.	தொல்காப்பியம்-சொல்லதிகாரம்		
	தெய்வச்சிலையார் உரை	324	60
6.	தொல்காப்பியம்-நன்னூல்-சொல்லதிகாரம்		
	பேரா. க. வெள்ளைவாரணனார்	474	75
7.	நன்னூற் காண்டிகையுரை		
	ஆறுமுக நாவலர் பதிப்பு	398	65
8.	பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும்		
	டாக்டர் தெ. ஞானசுந்தரம்	688	
	நூலகப்பதிப்பு		180
	பொதுப்பதிப்பு		130
10	நீலகேசி (உரையுடன்)		
	பேரா. சக்கரவர்த்தி நயினார் பதிப்பு	848	140
11	சட்டவியல்		
	பேரா. மா. சண்முகசுப்பிரமணியம்	416	
	நூலகப்பதிப்பு		92
	மாணவர் பதிப்பு		36
	தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும்		
	சமுதாய வாழ்க்கையும்		
	பேரா. கே. எம். வேங்கடராமையா	564	155

விற்பனைக் கழிவு :- அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

Statement about ownership and other particulars about Newspaper

TAMIL POZHIL

Form IV

1. Place of Publication	:	Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur-2.
2. Periodicity of its Publication	:	Monthly
3. Printer's Name	:	Thiru M. Chandramouli,
	:	Proprietor,
	:	Gemini Printing House.
Nationality	:	Indian
Address	:	1837/1, West Main Street,
	:	Thanjavur - 613 009
4. Publisher's Name	:	Thiru S. Ramanathan,
Nationality	:	Indian
Address	:	Thiru S. Ramanathan, Chairman, Karanthai Tamil Sangam, Thanjavur-613 002.
5. Editor's Name	:	Thiru. C. Balasundaram,
Nationality	:	Indian
Address	:	367, West main st,
	:	Thanjavur 613 009.
6. Name and address of individuals who own the newspaper and partners	:	Karanthai Tamil Sangam (Regd)
	:	Karunthattamkudi,
	:	Thanjavur. Pin : 613 002.

I. S. Ramanathan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

S. Ramanathan,
Publisher.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல். எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமா மகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம் பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர் :
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல் - அஞ்சல்.

T 4739

11. The Curator,
Govt.Oriental Manuscripts Library,
M a d r a s.600 005

24047

Acc. no.

ஆசிரியர்,
தமிழ்ப் பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை